அறிக்கையிடுதலின் ஆற்றல்

டெரிக் பிரின்ஸ்

Derek Prince Ministries

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ARIKAIYIDUTHALIN AARTAL"
"THE POWER OF PROCLAMATION" (Tamil Edition)

Originally published in English under the title
"THE POWER OF PROCLAMATION"

Copyright © 2002 - DPM - International

All rights reserved.

TA/0313/1000/LOP
ISBN 978-93-82910-57-2

Published by permission in the Tamil language.

For orders & other enquiries please contact :
Derek Prince Ministries - India
1C, EVR Road, IIIrd Floor, Puthur,
Trichy - 620 017,
Tamil Nadu, S.India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201



Derek Prince Ministries
http://www.derekprince.in

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

பொருளடக்கம்

அறிக்கையிடுதலின் ஆற்றல் 5

அறிக்கையிடுதல் என்றால் என்ன? 6

தகவல் தொடர்புக்கான சக்தியை பெருகச்செய்தல் 8

மோசேயின் கோல் 10

வார்த்தையும் ஆவியும் இணைந்து 11

தேவனுடைய வார்த்தைக்கு முன்பாக நடுங்கக் கற்றுக் கொள்ளுங்கள் 15

தேவனுடைய வார்த்தையை பற்றிப் பிடித்துக் கொள்ளுதல் 19

அதிகாரத்தைப் பயன்படுத்துதல் 21

எதிர்மறையான எண்ணங்களை மேற்கொள்ளுதல் 22

கூறி அறிவிப்பதன் மூலம் கிட்டும் பாதுகாப்பு 25

பொருளாதார மற்றும் சரீர தேவைகள் 26

உள் நாடு, உலக நாடுகள் சார்ந்த நடைமுறைகள் பற்றிய அறிக்கைகள் 29

எதிர்ப்பு சக்திகள் பற்றிய அறிக்கை 31

நடைமுறையில் பயன்படுத்துதல் 35

வேத பகுதிகளை உபயோகிப்பது குறித்த ஆசிரியரின் ஆலோசனைகள் 39

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வசன அறிக்கைகள்

கர்த்தருக்குப் பயப்படும் பயம் 49
நீதியும் பரிசுத்தமும் 53
உடல் நலமும் பலமும் 59
வழிநடத்துதல் பாதுகாப்பு மற்றும்
பத்திரப்படுத்துதல்.....63
மனிதனின் காரியங்களில் தேவனின் தலையீடு 68
சோதனையிலும் துன்ப அனுபவங்களிலும் 73
ஆவிக்குரிய போராட்டம் 78
பூரண மீட்பு 82
மனோரீதியிலும் உணர்ச்சியின் அடிப்படையிலும்
நிலையானதன்மை 87
தேவனைச் சேவித்தல் 91
சிலுவையில் நிறைவேற்றப்பட்ட பரிமாற்றம் 96
மீட்கப்பட்டோர் இப்படிச் சொல்வார்களாக 97
இரத்தம் மட்டுமே 98
தேவனுடைய பாதுகாப்பிலுள்ள நம்பிக்கையை
அறிக்கையிடுதல் 99
ஆசிரியரைப்பற்றி 101

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அறிக்கையிடுதலின் ஆற்றல்

தேவனுடைய வார்த்தையைக் கூறி அறிவிப்பதில் அளவு கடந்த வல்லமை வெளிப்படுகிறது. இந்த வியக்கத்தக்க வல்லமையைத் தங்களுக்கு உரியதாக்கிக் கொள்ளலாம் என்ற உண்மையை அநேகக் கிறிஸ்தவர்கள் அறிந்து கொள்வதில்லை. தனிப்பட்ட தேவைகளிலிருந்து சர்வதேச பிரச்சனை வரைக்கும் அனைத்து சூழ்நிலைகளுக்கும் ஏற்ற சக்திவாய்ந்த தீர்வு தேவனுடைய வார்த்தைக்கு உண்டு. எப்பேர்ப்பட்ட சூழ்நிலைகளை நாம் சந்தித்தாலும் சரி, அந்த சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப நாம் தேவனுடைய வார்த்தையைக் கூறி அறிவிக்க நாம் கற்றுக்கொள்வோமென்றால், சூழலை மாற்றி உருவாக்கும் தேவனுடைய வல்லமை அதில் வெளிப்படுவதை நாம் காணலாம். ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவனுடைய வார்த்தையைக் கூறி அறிவிக்கும் உரிமையும் பொறுப்பும் உள்ளது.

என்னுடைய ஊழியத்தின் காலத்தில் என்னுடைய மனைவி ரூத் எப்பொழுதெல்லாம் என்னோடு கூட இருந்தார்களோ, அப்பொழுதெல்லாம் நான் அவர்களோடு சேர்ந்து தேவனுடைய வார்த்தையைக் கூறி அறிவித்த பின்புதான், எனது செய்தியை நான் ஆரம்பிப்பேன். இவ்வாறுதான் செய்தியளிக்க ஆரம்பிக்க வேண்டுமென்று தேவன் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார். கூட்டத்தின் ஆரம்பத்தில் தேவனுடைய வார்த்தையை விசுவாசத்தோடு கூறி அறிவிப்பதால் கூட்டத்தில் வித்தியாசமான முறையில் ஆவிக்குரிய சூழல் உருவாவதோடு, செய்தியளிப்பவரும்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஆவியின் அபிஷேகத்தால் நிரப்பப்படுவதை நாங்கள் கண்டுகொண்டோம்.

நாங்கள் அடிக்கடி அறிவித்ததும் எங்களுக்கு மிகவும் பிடித்தமானதும் வேத புத்தகத்தின் செய்தியை உள்ளடக்கியதுமான வசனம் இதுதான்:

> ***[10]மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படி செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ,***
>
> ***[11]அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.***
>
> ***(ஏசாயா 55:10-11)***

அறிக்கையிடுதல் என்றால் என்ன?

Proclaim *(கூறி அறிவிப்பது)* என்ற ஆங்கில வார்த்தையானது, இலத்தீன் வார்த்தையிலிருந்து வந்ததாகும். அதற்கு "சத்தமிட்டு கூப்பிடு" என்று பொருள். புதிய ஏற்பாட்டில் இதனை சார்ந்து வரும் வேறு ஒரு வார்த்தை "அறிக்கை செய்தல்" என்பதாகும். அறிக்கை செய்தல் என்றால் "அதையே திரும்ப சொல்" என்று பொருள். தேவன் தம்முடைய வார்த்தையில் ஏற்கெனவே என்ன கூறியுள்ளாரோ அதையே நமது வாயின் மூலம் கூறுவதே அறிக்கை செய்தலாகும். தேவனுடைய வார்த்தைக்கு ஏற்றாற்போல் நமது வாயின் வார்த்தைகளும் இருக்க வேண்டும். இதன் மூலம் இயேசுவின் அதிகாரத்தையும் அவருடைய ஆதரவையும் நாம் பெறுகிறோம்.

எபிரெயர் **3:1**ல் இந்நிருபத்தை எழுதியவர் இவ்வாறு கூறுகிறார்: "நாம் அறிக்கை பண்ணுகிற பிரதான

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஆசாரியர் இயேசுவே" இது ஒரு முக்கியமான கூற்று ஆகும். நாம் எதை அறிக்கை செய்கிறோமோ அதற்கு இயேசுவே பிரதான ஆசாரியர். வேறு வகையாகக் கூறினால் இயேசுவை விசுவாசிக்கும் மக்களாகிய நம்மைக் குறித்து வேதத்தில் கூறப்படும் காரியங்களை நமது வாயின் மூலமாக நாம் எப்பொழுதெல்லாம் கூறுகிறோமோ, அப்பொழுதெல்லாம் இயேசு நமக்கு பரலோகத்தில் பிரதான ஆசாரியராக இருக்கிறார். இது அவருடைய அதிகாரத்தையும் ஆசீர்வாதத்தையும் நமக்குக் கொண்டுவருகிறது.

ஆனால் நாம் அமைதலாக இருக்கும்போது பிரதான ஆசாரியராக அவர் செயல்பட நாம் அவரை அனுமதிப்பதில்லை. நாம் தவறான முறையில் அறிக்கை செய்யும்போது காரியம் இன்னும் மோசமாகிறது. உண்மையைக் கூறினால் தவறான சக்திகள் நம்மைச் சூழ இருந்துகொண்டு கிரியை செய்ய நாம் அனுமதிக்கிறோம்.

கூறி அறிவிப்பது என்பது வல்லமையாக அறிக்கை செய்வதை ஒத்திருக்கிறது. இது ஆவிக்குரிய போராட்டத்தைக் குறித்துக் கூறப்படும் ஒரு வார்த்தையாகும். உங்களுடைய வாழ்க்கையிலோ, உங்கள் சபையின் காரியங்களிலோ அல்லது எப்படிப்பட்ட மோசமான நிலையாக இருந்தாலும், இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தேவனுடைய வார்த்தையைக் கிரியை செய்யுமாறு தேவனிடத்திலிருந்து அதிகாரத்தை இது பெற்றுத்தருகிறது. தேவனுடைய வல்லமை கிரியை செய்யத்தக்கதாக எண்ணிறந்த சூழ்நிலைகள் ஏற்படுவதுண்டு. தேவனுடைய வல்லமையை விளங்கச் செய்ய கூறி அறிவிப்பதைவிட வேறு சிறந்த முறை ஏதுமில்லை.

கூறி அறிவிப்பது என்பது தண்டோரா போடுபவனுடைய செயலை ஒத்திருக்கிறது. பறை அறிவிப்பது என்பது தற்காலத்தில் அதிகமாக

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

நடைமுறையில் இல்லை. பண்டைக் காலத்தில் ஒரு அரசனோ, அதிகாரியோ, ஒரு செய்தியை பொதுமக்களுக்கு அறிவிக்க தண்டோரா போட்டனர். பறை அறிவிப்பவர்கள் "மகா ஜனங்களே" என்று சத்தமிட்டு கூறி பின்பு தாங்கள் சொல்ல வந்த செய்தியை அறிவிப்பார்கள். எனவே எப்பொழுதெல்லாம் "மகா ஜனங்களே" என்று கூறும் சத்தத்தை மக்கள் கேட்கிறார்களோ, அப்பொழுதெல்லாம் இது அரசாங்கத்திடமிருந்து கூறப்படும் செய்தி என்று மக்கள் கவனமாகக் கேட்பார்கள். "பிரசங்கி" என்ற வார்த்தைக்கு புதிய ஏற்பாட்டில் சரியான மொழிபெயர்ப்பு கூறப்படவில்லை. அதற்குச் சரியான மொழிபெயர்ப்பு கூறி அறிவித்தலாகும்.

தகவல் தொடர்புக்கான சக்தியை பெருகச் செய்தல்

தற்காலத்திலுள்ள தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி இதுவரை இல்லாத அளவு தேவனுடைய வார்த்தையை மிகவும் அதிகமாக கூறி அறிவிக்க இயலும். நான் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக வேதாகமத்தைப் போதிப்பவனாக இருக்கிறேன். வேதத்தை மக்களுக்கு விளக்கிச் சொல்லி அவர்கள் அதனை நன்கு புரிந்து கொள்ளும்படி செய்வது என்னுடைய கடமை என்று நான் எப்போதும் நினைப்பேன்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பாக "கூறி அறிவிப்பது" என்ற வார்த்தையைக் குறித்து ஆண்டவர் என்னிடம் அதிகமாக உணர்த்தி வந்தார். போதிப்பதோடு நின்றுவிடாமல் அதற்குமேலாக அறிக்கையிடுமாறு என்னிடம் தேவன் அறைகூவல் விடுத்தார். இதன் பலனாக வானொலி மூலமாக தேவனுடைய செய்தியை ஒலிபரப்பும் ஊழியத்தை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள எட்டு வானொலி நிலையங்களில் 1979ஆம் ஆண்டு துவங்கும்படி தேவன் கிருபை செய்தார். தற்போது இது

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

உலகமுழுவதுமாக பத்து மொழிகளில் ஒலிபரப்பப்பட்டு வருகின்றது.

உண்மையில் இது ஒரு கூறி அறிவிக்கும் ஊழியம். வானொலி ஊழியத்தை ஆரம்பிக்க ஏதுவாக இருந்த வசனம் மத்தேயு 24:14 ஆகும்.

[14]இராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். என்பதாகும்.

உலகத்தில் இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சிகளாகிய நாம் சபையாக இந்தப் பணியை நிறைவேற்றும் வரை முடிவு வராது. அனைத்து நாடுகளுக்கும் சாட்சியாக நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டியது நம்முடைய கடமையாகும்.

தேவனுடைய வார்த்தையினுடைய வல்லமையை என்னுடைய அனுபவத்தின் மூலமாக நான் நன்கு அறிவேன். விசுவாசத்தோடு நாம் கூறி அறிவிக்கும்போது அது மிகப்பெரிய காரியங்களை செய்து முடிக்கும். கிறிஸ்தவ நடைமுறைகளுக்கு ஏற்றவிதமாக ஒரு பெண் எப்படி இருக்க வேண்டுமோ அதற்கு மாறாக வாழ்ந்து வந்த ஓர் அமெரிக்க பெண்ணைப் பற்றி எனக்கு நினைவு வருகிறது. அவள் ஒரு மார்கிஸிய வாதி. பெண்ணுரிமை இயக்கத்தையும் சேர்ந்தவள். மேலும் அவள் ஓரினச் சேர்க்கை உடையவள். அவள் ஒரு முறை தெற்கு சீனாவின் கடலில் ஒரு கப்பலில் இருந்தாள். அவளோடு அவளுடைய இயக்கத்தைச் சேர்ந்த தீய நண்பர்களும் இருந்தனர். அப்பொழுது கப்பலைப் புயல் தாக்கியது. அப்போது கப்பலின் அடித்தளத்திற்குச் சென்று ரேடியோ மூலம் வானிலையின் விபரம் தெரிந்து வருமாறு இவளிடம் இவள் சிநேகிதிகள் கூறினர்.

அவள் வானொலி பெட்டியில் வானிலை செய்தியைத் தேடிக் கொண்டிருக்கையில் பிலிப்பைன்ஸிலுள்ள

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மணிலாவிலிருந்து ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த என்னுடைய செய்தியை அவள் கேட்க நேர்ந்தது. அப்பொழுது அவள் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வந்தாள். அவள் இப்போது முற்றிலும் மாறுபட்ட வித்தியாசமானவளாக தேவனுக்கென்று முழுவதுமாகப் பணி செய்கிறவளாக மாறினாள். அவள் கேட்டது போதனையன்று. தேவனுடைய வார்த்தை மட்டுமே கூறி அறிவிக்கப்பட்டது. அது தன் பணியைச் செய்தது.

மோசேயின் கோல்

இஸ்ரவேல் மக்களை எகிப்தின் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கும்படியாக தேவன் மோசேயை அழைக்கும் நிகழ்ச்சியைப் பாருங்கள். எரியும் முட்புதரில் தேவன் மோசேயை எகிப்துக்குச் சென்று இஸ்ரவேல் மக்களை அழைத்துவர வேண்டுமென்று மோசேயோடு பேசுவதை யாத்திராகமம் 4ஆம் அதிகாரத்தில் நாம் காணலாம். 40 வயதில் அவருக்கிருந்த தன்னம்பிக்கை இப்போது (இப்போது அவருக்கு வயது 80) அவருக்கு இல்லை. "என்னால் இதை ஏற்க இயலாது. நான் எப்படி இதைச் செய்வது? வேறு யாரையாவது அனுப்பும்" என்று கூறுகிறார்.

தேவன் மோசேயை நோக்கி "உன் கையில் இருப்பது என்ன?" என்று கேட்கிறார். எல்லா மந்தை மேய்ப்பரும் வைத்திருப்பது போல இது ஒரு கோல் என்று மோசே கூறுகிறார். இந்த கோலின் முக்கியத்துவம் குறித்து மோசேக்குத் தெரியவில்லை. "அந்தக் கோலை தரையிலே போடு" என்று தேவன் கூறினார். மோசே தரையிலே கோலை போட்டபோது அது பாம்பாக மாறிற்று. மோசே தன்னுடைய கோலைக் கண்டு விலகி ஓடுகிறார். மோசேயின் கற்பனைக்கும் எதிர்பார்ப்புக்கும் மேலாக அந்தக் கோலில் ஒரு சக்தி இருந்தது என்று கூறலாம்.

பிறகு "அதன் வாலைப் பிடி" என்று தேவன்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கூறுகிறார். பாம்புகளைப் பற்றி நன்கு அறிந்தவர்கள் இப்படி பாம்பின் வாலைப் பிடித்துத் தூக்கக்கூடாது என்றுதான் கூறுவர். ஆனால் மோசே தேவனுக்கு கீழ்ப்படிகிறார். அந்தப் பாம்பு மீண்டும் கோலாக மாறியது. தேவன் மோசேயை நோக்கி "இந்தக் கோலையும் பிடித்துக் கொண்டுபோ. இந்த ஒரு கோலைக் கொண்டு அனைத்து காரியங்களையும் நீ நிறைவேற்றுவாய்" என்று கூறினார்.

யாத்திராகமத்தின் எஞ்சிய அதிகாரங்களையும் வாசித்தீர்களானால், இஸ்ரவேல் மக்களுடைய முழு விடுதலைக்கும் அந்தக்கோல் காரணமாயிருந்தது என்று நாம் அறிந்து கொள்ளலாம். ஒவ்வொரு முறையும் தேவன் இடைப்படவேண்டும் என்று மோசே விரும்பியபோது, மோசே தனது கோலை நீட்டுவார். தேவன் உடனே பதிலளிப்பார். இதன் பலனாக பார்வோனின் ஆட்சிக்கு நீங்கலாகி இஸ்ரவேலர் விடுதலை பெற்றனர். இதற்கான அதிகாரம் மோசேயின் கையிலிருந்த கோலில் இருந்துது. சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிளக்க நேர்ந்தபோது மோசே தனது கோலை நீட்டினார். அப்போது சிவந்த சமுத்திரம் இரண்டாகப் பிளந்தது.

இஸ்ரவேல் மக்களைத் தொடர்ந்து எகிப்தியர் சிவந்த சமுத்திரத்தின் வெட்டாந்தரைக்குள் பிரவேசித்தபோது மோசே மீண்டும் தனது கோலை நீட்டினார். அப்போது தண்ணீர் அவர்களை மூழ்கடித்தது. தேவன் மோசேயிடம் செய்யும்படி கூறின அனைத்துக் காரியங்களுக்கும் மோசேக்குத் தேவைப்பட்டது அவருடைய மேய்ப்பனின் கோல் ஆகும். மோசே அந்தக் கோலை முதலாவதாகப் பிடித்தபோது, இவ்வளவு மகிமை அதில் இருக்கும் என்று நினைக்கவில்லை.

வார்த்தையும் ஆவியும் இணைந்து

வேதத்தை நேசிக்கும் ஒவ்வொரு விசுவாசியான கிறிஸ்தவ ஆணுக்கும் பெண்ணுக்கும் அவர்களது

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கையில் ஒரு கோல் இருக்கிறது. அது தேவனுடைய வார்த்தை. தேவன் உங்களை எந்தக் காரியத்தைச் செய்யும்படி அழைத்தாரோ அதனைச் செய்து முடிக்க உங்கள் கையிலுள்ள ஆயுதம் வேதப்புத்தகம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

முதலாவது நாம் தெரிந்து கொள்ள வேண்டிய காரியம்: தேவனுடைய வார்த்தையில் உள்ள வல்லமை. இது ஓர் இயற்கைக்கு அப்பாற்பட்ட நூல். மோசேயின் கோலில் இருந்த வல்லமையைப் போல இதற்கும் வல்லமை உண்டு. ஆனால் முதலாவது இதனை மேல் வாரியாகப் பார்க்கும்போது அது புலனாகாது. அதனை நீங்கள் புரிந்து கொள்ளும்போது, அதனுடைய வல்லமை உண்மையில் எல்லையற்றது என்பதைக் காண்பீர்கள்.

தேவனுடைய வார்த்தையில் உள்ள வல்லமைக்கு உதாரணமாகச் சில வேத வசனங்களைக் கூற விரும்புகிறேன்.

6கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது. (சங்கீதம் 33:6)

"சுவாசம்" என்ற வார்த்தைக்கு எபிரெய மொழியில் உள்ள சொல் 'ரூவா' என்பது ஆகும். இதன் பொருள்: "ஆவி." எல்லா படைப்புகளும் இரண்டு காரியங்களால் படைக்கப்பட்டுள்ளன: ஒன்று தேவனுடைய வார்த்தை, மற்றது தேவனுடைய ஆவி. எவையெல்லாம் இருந்தனவோ, இருக்கின்றதோ, வரப்போகின்றதோ அவைகளுக்கு இந்த இரண்டு சக்திகளும் ஒன்று சேர்ந்து கிரியை செய்வதே காரணமாகும். வார்த்தை ஆவியுடன் சேர்ந்து கிரியை செய்ய வேண்டும். இதன் காரணமாகவே சங்கீதக்காரன் "ஆவி" என்று கூறாமல் "சுவாசம்" என்று கூறுகிறார் என்று நான் நினைக்கிறேன்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மிக எளிமையாகக் காணப்பட்டாலும், அவ்வார்த்தைகளுக்கு அளப்பறிய ஆற்றல் உள்ளது என்பதை நினைவிற் கொள்ளவும். நான் ஆப்பிரிக்க மாணவர்களுக்கு ஆங்கிலத்தை இரண்டாவது போதனா மொழியாகக் கற்றுக் கொடுத்தபோது வார்த்தைகளின் உச்சரிப்புக்கள் பற்றி நான் முதலில் கற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது. வார்த்தைகளிலுள்ள சில முக்கிய காரியங்களை அறிந்து கொண்டேன். நாம் எப்படிப் பேசுகிறோம்? நுரையீரலிலிருந்து காற்றை மூக்கு மற்றும் வாய்வழியாக இழுத்து, வாயில் பலவிதமான அசைவுகள் மற்றும் நிகழ்வுகளினால் வாயிலிருந்து வார்த்தைகளாக அக்காற்று வெளிப்படுகிறது.

அடிப்படையான ஓர் உண்மை என்னவென்றால் மூச்சு இல்லாமல் பேச்சு இல்லை. இப்படிதான் தேவனும் பேசுகிறார். அவர் ஒவ்வொருமுறையும் பேசும்போது அவர் பேசும் வார்த்தை அவரது சுவாசத்தினாலும் ஆவியினாலும் வெளிப்படுகிறது. வார்த்தையும் தேவனுடைய ஆவியும் ஒன்றாக செயல்படுகின்றன. வார்த்தையும் தேவனுடைய ஆவியும் உலகத்தை உருவாக்கி அதைப் பாதுகாத்து வருகின்றன.

2 பேதுரு 3:5–7ல் மிகவும் வல்லமையான ஒரு வேதவாக்கியம் உள்ளது. அது மூன்று காரியங்களை நமக்கு கூறுகின்றது: வார்த்தை உருவாக்குகிறது, வார்த்தை பாதுகாக்கிறது, வார்த்தை அழிக்கிறது.

5பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும் உண்டாயினவென்பதையும்,

6அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள்.

7இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு,

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது.

தேவனுடைய வார்த்தையினாலே வானங்கள் உண்டாயின. தேவனுடைய வார்த்தையினாலே அவைகள் காக்கப்படுகின்றன. தேவனுடைய வார்த்தையினாலே அவைகள் அழிந்து போகப்போகின்றன. தேவனுடைய வார்த்தை உருவாக்கி, காத்து, அழிக்கிறது. சில சமயங்களில் இந்த உலகத்தில் மனிதனால் உண்டாகும் குழப்பமான காரியங்களைக் காணும்போது, தேவனுடைய வார்த்தை ஒரு நாள் இந்தக் குழப்பத்தைச் சரிசெய்யும் என்று எண்ணி நான் மகிழ்ச்சியடைகிறேன். எல்லாக் காரியங்களையும் தேவன் தமது வார்த்தையின் மூலம் நிறைவேற்றுகிறார்.

ஆரம்பத்தில் குறிப்பிட்ட வசனமாகிய ஏசாயா 55:10,11ஐ நாம் காண்போம். இந்த வார்த்தை தேவனுடைய வாயிலிருந்து பிறந்திருக்க வேண்டும். இல்லையெனில் இதில் எந்தவிதமான பலனுமிருக்காது.

[10]மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படி செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ,

[11]அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.

"என் வாயிலிருந்து புறப்படும் வசனம்" என்று தேவன் கூறுவதைக் கவனியுங்கள். இதை "என்னுடைய மூச்சுக்காற்றினால் உண்டாகும் வசனம்" என்று இன்னொரு வகையாகக் கூறலாம்.

"எழுத்து கொல்லுகிறது" என்று **2** கொரிந்தியர் **3:6**ல்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

பவுல் கூறுகிறார். ஆவியற்ற வசனம் ஜீவனைக் கொடுக்காது என்று வேறுவகையாகக் கூறலாம். வசனமும் ஆவியும் இணைந்திருக்க வேண்டும். அநேக வசனங்களைக் கூறி ஒரு பிரசங்கத்தைச் செய்தாலும் அதில் ஆவியின் வல்லமை (சுவாசம்) இல்லை என்றால் அதில் பயனில்லை. அது ஜீவனைக் கொண்டுவராது; மாறாக மரணத்தைக் கொண்டுவரும். இவையிரண்டும் சேர்ந்து செயல்பட வேண்டும்.

மோசேயின் அனுபவத்தைக் கொண்டு தேவனுடைய வசனத்தைக் கூறி அறிவிப்பதனால் தேவனுடைய வார்த்தையை வல்லமைமிக்கதாக எப்படி மாற்றலாம் என்று நான் கூற விரும்புகிறேன். கூறி அறிவிப்பது என்பது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் வசனத்தை பிரயோகிப்பதாகும். அதற்கு நம்பிக்கையும் தைரியமும் வேண்டும். நீங்கள் இதனை விசுவாசிக்க வேண்டும்.

தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கும் இருதயத்தோடும் உதடுகளோடும் கூறும்போது தேவன் தாமே அந்த வார்த்தையை அவரது ஆவியின் வல்லமையால் அறிக்கையிடுவது போன்று அபரிமிதமான ஆற்றல் வெளிப்படுவதைக் காண்பீர்கள். தேவன் தாமே பேசவேண்டியதில்லை. தேவனுடைய ஆவியானவர் தேவனுடைய வார்த்தையை உங்களுடைய வாயின் மூலமாக பேசுவாரென்றால் தேவன் உலகத்தை சொல்லினால் உண்டாக்கும்போது வெளிப்பட்ட வல்லமைக்கு ஒப்பான வல்லமையுடையதாய் உங்கள் வாயின் வார்த்தைகளும் இருக்கும்.

தேவனுடைய வார்த்தைக்கு முன்பாக நடுங்கக் கற்றுக்கொள்ளுங்கள்

மோசேக்கு முதலில் நேர்ந்த காரியம்: அவர் பயப்பட்டார். அவர் தனது கோலை தரையில் போட்டவுடன் அது பாம்பாக மாறியது. எனவே அவர்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

பயந்து ஓடினார். வேத வசனத்தைக் கூறி அறிவித்து அதன்மூலம் பயன்பெற வேண்டுமாயின் முதலாவது நாம் தேவனுடைய வார்த்தைக்கு அஞ்ச வேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு முன்பாக நாம் பக்தியாக நடுக்கங்கொள்ள கற்றுக் கொள்ள வேண்டும்.

[1]கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி; நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது? நான் தங்கியிருக்கும் ஸ்தலம் எப்படிப்பட்டது?

[2]என்னுடைய கரம் இவைகளையெல்லாம் சிருஷ்டித்ததினால் இவைகளெல்லாம் உண்டாயின என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன்.

(ஏசாயா 66:1, 2)

ஏற்கெனவே அகிலத்தையும் படைத்த ஆண்டவரை கவர்ந்திழுக்கும்படி நாம் எதையும் கட்டி எழுப்பிட முடியாது. ஆனால் அவருடைய தயவை ஈர்ப்பது ஒன்று உள்ளது. அது "இதை நான் நோக்கிப் பார்ப்பேன்" என்று சொல்வது. அவ்வாறு செய்யும் வேளை அவர் அதைக் கனம் பண்ணுகிறார்.

தேவன் யார் மேல் அக்கறை கொண்டு அவர்களைக் கனப்படுத்துவார்? "சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்" என்கிறார்.

எனவே மோசேயைப்போல தேவனுடைய வார்த்தைக்கு முதலாவது நாம் பக்தியுடன் நடுங்க வேண்டும். இந்நாட்களில் சபையில் மக்கள் தேவனுடைய வார்த்தைக்கு அஞ்சி நடுங்குவது மிகவும் குறைந்துள்ளது. இது நமக்குப் பழகிப்போன ஒன்று. தேவனுடைய வார்த்தையை அவ்வப்போது மேற்கோள் காட்டிப் பேசுகிறோம். ஆனால் உண்மையான கனத்தை நாம்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அதற்குச் செலுத்துவதில்லை. இந்நிலை மாறவேண்டும்.

தேவனுடைய வார்த்தைக்கு முன்பாக நாம் ஏன் நடுங்க வேண்டும் என்பதற்கு இரண்டு காரணங்களை சுவிசேஷப் பகுதியிலிருந்து நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதலாவது யோவான் *12:47, 48*ல் இயேசு இவ்வாறு கூறுகிறார்.

> *47 ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை; நான் உலகத்தை நியாயம் தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்கவந்தேன்.*
>
> *48 என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்.*

நாம் அனைவரும் தேவனுடைய வசனத்தில் நியாயந்தீர்க்கப்படுவோம். நாம் அனைவரும் சர்வவல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக ஒருநாள் நமது வாழ்க்கையைக் குறித்துக் கணக்கொப்புவிக்க வேண்டும். அவ்வேளை நாம் அவருக்கு முன்பாக நடுங்குவோம். அதைக்குறித்து நாம் கவலைப்படுவோம். இதே வகையில் நாம் தேவனுடைய வார்த்தைக்கு முன்பாக இப்பொழுது நடந்து கொள்ளவேண்டும். ஏனெனில் தேவனுடைய வார்த்தையே நம்மை நியாயந்தீர்க்கும் என்று இயேசு கூறுகிறார். நாம் ஒவ்வொரு முறையும் வேதத்தைத் திறந்து வாசிக்கும்போது இதை நாம் அறிந்திருப்போமென்றால் நம்மை நியாயந்தீர்க்கும் நியாயாதிபதியை நாம் காண்கிறோம் என்று நாம் உணர்ந்து கொள்ளுவோம். ஆகவே நாம் நடுக்கம் கொள்வதில் வியப்பொன்றுமில்லை.

யோவான் *14:23*ல் மற்றுமொரு ஆச்சரியமான காரியத்தை இயேசு

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

23"... ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்". என்று கூறுகிறார்.

தேவனைக்குறித்து பன்மையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில வேத பகுதிகளில் இதுவும் ஒன்று. நானும் (குமாரனும்) பிதாவுமாக நாங்கள் அவனிடத்தில் வருவோம். எப்படி அவர்கள் வருவார்கள்? அவருடைய வார்த்தையின் மூலம். நாம் தேவனுடைய வார்த்தைக்கு நேராக வரும்போது பிதாவும் குமாரனும் நமது வாழ்க்கையில் வந்து நம்மோடு வாசம் செய்வார்கள்.

ஒரு வேளை உங்களுடைய தரிசனத்தில் உங்களுடைய வீட்டுக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வருவதைப் போன்று நீங்கள் காண்பீர்களென்றால் நீங்கள் மிகுந்த மகிழ்ச்சியில் ஆச்சரியப்பட்டுப்போவீர்கள். நீங்கள் அவருடைய பாதத்தில் விழ ஆசைப்படுவீர்கள். இயேசு கூறுகிறார் "நான் மட்டுமல்ல பிதாவும் கூட வருவார்". அவர்கள் தேவனுடைய வார்த்தையின் மூலம் வருவார்கள். அப்படியானால் தேவ வசனத்தை எப்படி கனம்பண்ண வேண்டும்?

தற்கால சபைகளைச் சார்ந்த மக்களாகிய நாம் தேவனுடைய வார்த்தையைக் குறித்த நமது தவறான அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு உரிய மரியாதையையும் பயபக்தியையும் கனத்தையும் நாம் செலுத்தவேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு உரிய கனத்தை நாம் செலுத்தாத வரையில், அந்த வார்த்தையினால் நமது வாழ்க்கையில் எந்தப் பயனும் இராது.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தேவனுடைய வார்த்தையைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுதல்

மோசேக்கு நேர்ந்த முதல் அனுபவம் அவர் தேவனுடைய வார்த்தைக்கு முன்பாக நடுங்கினார். தனது கோலில் இருந்த வல்லமையை திடீரென உணர ஆரம்பித்து அதை விட்டு ஓட ஆரம்பித்தார். அவர் மிகவும் பயந்தார். இரண்டாவது அவர் செய்த காரியம் அந்தக் கோலை அவர் பிடித்தார். விசுவாசத்தோடு அந்த பாம்பின் வாலைப் பிடித்தபோது அது மீண்டும் அவர் கையில் கோலாக மாறியது. முதலில் நாம் பக்தியான நடுக்கம் கொள்ள வேண்டும். பின்பு தேவனுடைய வார்த்தையைப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

*149*ஆம் சங்கீதத்தின் கடைசி பகுதியில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம், பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து தங்கள் படுக்கைகளின்மேல் கெம்பீரிப்பார்கள். பரிசுத்தவான்கள் என்பவர்கள் உண்மையாகத் தங்களை ஒப்புக்கொடுத்த விசுவாசிகள். அவர்கள் தேவனுடைய வார்த்தையின் சத்தத்துக்கு முன்பாக நடுங்கி அதற்கு முற்றிலும் கீழ்ப்படிவார்கள்.

[6]ஜாதிகளிடத்தில் பழிவாங்கவும், ஜனங்களை தண்டிக்கவும்,

[7]அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளாலும், அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும், எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள்பேரில் செலுத்தவும்,

[8]அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும்.

[9]இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்.

இவை மிகவும் ஆச்சரியமான வசனங்களாகும்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

நீங்கள் உங்களை பரிசுத்தவான்களின் கூட்டத்தில் ஒருவராக நினைக்க முடியுமா? நமது வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும் நமது கரத்தில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்குமென்றால் நாம் தேசத்தின் மக்களை நியாயந்தீர்க்கலாம். இந்தக் காட்சியில் நீங்கள் இருப்பதாக உங்களால் நினைத்துப் பார்க்க முடிகிறதா? இந்தக் கனம் அல்லது பாக்கியம் எல்லா பரிசுத்தவான்களுக்கும் உரியது. இது எவ்வளவு சிறந்த சிலாக்கியம்! இந்த வசனங்களின்படி நாம் நம்மை நிலைநிறுத்தும்போது நாம் ஜெபிக்கும் ஜெபம் வித்தியாசமானதாக இருக்கும்.

"எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள் பேரில் செலுத்தவும்" என்று கூறப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். இது வார்த்தையிலுள்ளது. நாம் இந்த நியாயத்தீர்ப்பை கொடுப்பவர்கள் அல்ல. தேவன் இந்த நியாயத்தீர்ப்பை ஏற்படுத்தியுள்ளார். ஆனால், நாடுகள் மேலும் அவற்றை ஆளுபவர்கள் மேலும் எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை நிறைவேற்றும் சிலாக்கியத்தை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். வேறுவகையாகக் கூறினால் சரித்திரத்தில் விசுவாசிகள் ஆற்ற வேண்டிய பணி மிகவும் உன்னதமானதாகும்.

மிகவும் வேதனையான காரியம் என்னவென்றால் நமக்கு தேவன் ஏற்படுத்தி வைத்துள்ள சிலாக்கியங்களை அநேகக் கிறிஸ்தவர்கள் அறியாதே இருப்பதுதான். நாம் நியாயம் தீர்ப்பதில்லை. எழுதப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தையில் நாம் நியாயத்தீர்ப்பைக் காண்கிறோம். நம்முடைய பணி இதனை நிறைவேற்றுவதுதான். இதைத்தான் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இதனை நாம் எப்படிச் செய்யப்போகிறோம்? வேத வாக்கியங்களில் ஏற்கெனவே எழுதப்பட்டுள்ள நியாயத்தீர்ப்புகள் அடங்கிய தேவனுடைய வார்த்தையை அறிக்கையிடுவதின் மூலம் நாம் இதனை நிறைவேற்றுவோம். நாம் அவற்றை தொடர்ந்து அறிக்கையிடுவோம். நாம்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அறிவிப்புச் செய்கிறவர்கள். உலகத்தின் சந்தை வெளிகளில் நாம் நின்று "ஓ மக்களே" "ஓ மக்களே" என்று கூவி பின்பு தேவனுடைய நியாயத்தீர்ப்பை நாம் கூற வேண்டும்.

அதிகாரத்தைப் பயன்படுத்துதல்

அடுத்த நிலையைப் பற்றி நான் கூறும்போது நடைமுறைக்கு ஏற்றவாறு கூற விரும்புகிறேன். அந்தக்கோலை பிடித்தபின்பு மோசே என்ன செய்தார்? எகிப்துக்குச் சென்ற பின்பு அவர் தனது கோலை நீட்டினார். அந்தக் கோலில் இருந்த அதிகாரத்தைப் பயன்படுத்தினார். நாமும் அவ்வாறே செய்ய வேண்டும் என்று நான் ஆலோசனை கூறுகிறேன். தேவனுடைய அதிகாரம் எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையைக் கையிலெடுத்து அதனை சூழ்நிலைக்கு நேராக அறிக்கையிடுதல் வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் தேவனுடைய வல்லமை வெளிப்படுவதற்குப் பயன்படும் பல வழிகளில் ஒன்று, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தோடும் விசுவாசத்தோடும் தேவனுடைய வார்த்தையை அறிவிப்பதுதான். நமது மூச்சுக்காற்றோடு வார்த்தை வெளிப்படவேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சுவாசம் அல்லது தேவ ஆவியானவர் நமது வாயிலிருந்து அவரது வார்த்தையைப் புறப்படச் செய்யும்போது அந்தச் சூழ்நிலையில் தேவனுடைய வார்த்தை வல்லமையோடும் அதிகாரத்தோடும் வெளிப்பட்டு சூழ்நிலையை மாற்றும்.

தேவன் தமது சிங்காசனத்தை விட்டு இறங்கி மோசேயிடமிருந்து கோலை வாங்கி "உனக்காக இதைச் செய்கிறேன்" என்று கூறவில்லை. இப்படி தேவன் செய்யும்படி நம்மில் அநேகர் எதிர்பார்க்கிறோம். ஆனால் "உன்னிடத்தில் அந்தக் கோல் உள்ளது. நீ செய்" என்று தேவன் கூறுகிறார். யாத்திராகமம் 4:20ல் "தேவனுடைய

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கோல்" என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அதனை மோசே தன்னிடம் வைத்திருந்து தான் பயன்படுத்தினார்.

தேவனுடைய கோல் நமக்குப் பயன்தரக்கூடிய, பல சூழ்நிலைகள் குறித்து நான் கூற விரும்புகிறேன், தனிப்பட்ட சூழ்நிலைகளிலிருந்து ஆரம்பித்து பின் மண்டல தேசீய, சர்வதேச சூழ்நிலைகள் வரை வார்த்தையின் வல்லமையை விளங்கச் செய்யலாம் என நான் குறிப்பிட விரும்புகிறேன். நாம் கோலை நீட்டும்படியான பல முறைகள் குறித்துக் கூற விரும்புகிறேன். தேவனோடு எனது தியான நேரங்களில் நான் பயன்படுத்தும் சில அறிக்கைகள்தாம் இவைகள். இந்த நேரங்கள் மிகவும் அமைதலான நேரங்களாகும்.

உரக்கக் கூறுகையில் அதிகமான வல்லமை வெளிப்படும் என்று நான் கூறவில்லை. அந்தந்த சமயங்களில் பரிசுத்த ஆவியானவர் நடத்துதலைப் பொருத்து இது இருக்கும். ஒழுங்காக நான் நூறு அல்லது இருநூறு அறிக்கைகளை அறிவித்திருக்கிறேன். சில அறிக்கைகளை நான் நூற்றுக்கும் அதிகமான தடவைகள் அறிக்கையிட்டதுண்டு.

எதிர்மறையான எண்ணங்களை மேற்கொள்ளுதல்

உங்களில் எதிர்மறையான எண்ணம் கொண்டவர்களுக்கும் தங்களுடைய சூழ்நிலையையே பெரிதுபடுத்திப் பேசுபவர்களுக்கும் நான் கூறுவது என்னவென்றால், இந்த அறிவிப்புகளில் ஒன்றை ஒருமுறை மட்டும் கூறுபவர்களுக்கு எந்த விதமான பெரிய பலனும் தென்படாது. பலன் ஏற்படும் வரை திரும்ப திரும்ப அறிக்கையிடவேண்டும். உங்களுடைய எண்ணத்தில் அவைகள் நிலைகொள்ளும்வரை தொடர்ந்து அறிக்கையிட்டுக்கொண்டேயிருக்க வேண்டும்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

உங்களில் அநேகர் நான் ஒரு ஆங்கிலேயன் என்பதை அறிவீர்கள். ஆங்கிலேயர்கள் (பிரிட்டிஷ் மக்கள்) பொதுவாக ஒரு காரியத்தில் கெட்ட பகுதியையே அதிகம் சிந்திப்பார்கள். அப்படிபட்ட கெட்ட சிந்தனை கொண்டவர்களில் நான் முதன்மையானவன். கர்த்தர் என்னை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றினார். இதற்குச் சில காலமாயிற்று.

எப்பொழுதெல்லாம் நான் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறேனோ அப்பொழுதெல்லாம் நான் மிகவும் மோசமான விளைவுகள் ஏற்படும் என்று நினைப்பதுண்டு. உங்களுக்கும் அப்படிப்பட்ட பிரச்சனை இருக்கலாம்.

தேவனுடைய வார்த்தையாகிய ஆயுதத்தை பல வித்தியாசமான முறைகளில் உபயோகித்திருக்கிறேன், எரேமியா **29:11**ல் இஸ்ரவேலுக்கு தேவன் இவ்வாறு கூறுகிறார்.

> *[11]**நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.***

வேறு ஒரு மொழிபெயர்ப்பு இவ்வாறு கூறுகிறது.

> ***"உங்களை துன்பப்படுத்துவதற்கல்ல, அவைகள் உங்களை செழிப்பாக்குவதற்கான திட்டங்கள்".***

ஒவ்வொரு முறையும் எதிர்மறையான எண்ணம் எனக்கு ஏற்படும் போது, நான் "ஆண்டவரே நீர் எனக்காக நல்ல திட்டங்களை வைத்திருக்கிறீர் என்பதை நான் அறிவேன். அதற்காக நன்றி. எதிர்காலத்தில் எனக்கு நம்பிக்கையை அளிப்பதற்காக அவைகள் தீமைக்கல்ல நன்மை பயப்பதற்கே ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள்" என்று கூறுவேன்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

நான் இதனைப் பலமுறை அறிக்கையிட்டேன். அதற்குப் பிறகு தான் எதிர்மறையான எண்ணம் மறைய ஆரம்பித்தது. எனக்குள்ளாக நம்பிக்கையான எண்ணம் உருவானது. இதனை ஒரு நாளின் துவக்கத்தில் கூறுவீர்களென்றால் அந்த நாள் உங்களுக்கு ஆசீர்வாதமான நாளாக இருக்கும். நீங்கள் செய்ய நினைத்த காரியம் நிறைவேறும்.

மற்ற மக்கள் உங்களை எப்படி நடத்துகிறார்களோ அதற்கேற்ப உங்கள் நடவடிக்கைகள் இருக்கும். ஒரு கடைக்கு நேர்மையான எண்ணத்தோடு செல்வீர்களென்றால் கடைக்காரர்கள் உங்களுக்கு உதவிடுவார்கள். சரியான முறையில் அவர்கள் உதவி செய்யமாட்டார்கள் என்ற எண்ணத்தோடு நாம் செல்வோமென்றால் மரியாதைக்குறைவையும் பிரச்சனையையுமே நீங்கள் சந்திப்பீர்கள்.

நீங்கள் அறிக்கையிடும் வசனங்களை உங்களுடைய சொந்த அனுபவமாக்கிக் கொள்வது நல்லது. எனவே எங்கெல்லாம் வேதத்தில் "நீ" என்று கூறப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் "நான்" என்று கூறிப் படிக்க வேண்டும். இப்படிச் செய்வதால் "இது எனக்குரியது" என்று நீங்கள் அறிக்கையிடுகிறீர்கள். தற்பாதுகாப்பிலிருந்து நாம் ஆரம்பிப்போம். தேவைகளைப் பற்றியே கூறுவது எனக்கு மிகவும் சலிப்பாக உள்ளது, தங்கள் சொந்தத் தேவைகளுக்கு மேலே வேறு எதையும் சில கிறிஸ்தவர்கள் கேட்பதில்லை.

பயப்படும்படியான எதிர்மறை எண்ணங்கள் உங்களுக்கு ஏற்படும்போது நான் சாக நேரிட்டால் என்ன செய்வது என்ற எண்ணம் உங்களுக்கு தொடர்ந்து ஏற்படும். உதாரணமாக ஒரு வேளை உங்களுக்கு ஒரு அறுவை சிகிச்சை செய்யுமுன் உங்கள் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்று மருத்துவர் கூறியிருக்கலாம்.

ரூத் ஒருமுறை சுகவீனமாயிருந்தபோது இந்த சூழ்நிலை

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

எங்களுக்கு ஏற்பட்டது. நாங்கள் ஆயிரக்கணக்கான முறை அறிக்கையிட்ட வேத வாக்கியம் இதுதான்:

[17]நான் சாவாமல், பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன். (சங்கீதம் 118:17)

கூறி அறிவிப்பதன் மூலம் கிட்டும் பாதுகாப்பு

ஒரு வேளை உங்களுக்கு விரோதமாக மக்கள் பேசலாம், ஜெபிக்கவும் கூட செய்யலாம். இதற்கான பரிகாரம் ஏசாயா 54:17ல் கூறப்பட்டுள்ளது.

[17]உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்; இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும், என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்.

ரூத்தும் நானும் இரவு படுக்கச் செல்லும் முன்பு இந்த வசனத்தைச் சொல்லிவிட்டுத்தான் தூங்குவோம். நமது நீதி தேவனிடத்திலிருந்து வருவதை நாம் அறிக்கை செய்யும்போது நம்மைக் குற்றப்படுத்தும் நாவுகளையும் நாம் குற்றப்படுத்தலாம். ஏனெனில் தேவனுடைய நீதியை அவர்கள் பெற மறுப்பதால் அவர்கள் எப்போதும் தோல்வியின் பக்கமே உள்ளனர்.

நான் இன்னும் சற்று விளக்கமாகக் கூற விரும்புகிறேன். நமக்கு விரோதமாக பேசுகிறவர்களையோ அல்லது நமக்குத் தீங்கு நினைப்பவர்களையோ நாம் மன்னித்து தேவனுடைய நாமத்தில் அவர்களை ஆசீர்வதிக்கிறோம். எதிர்மறையான காரியங்களை நேரான காரியங்கள் மூலமாக நாம் மாற்றியமைக்கலாம்.

நம்மை மக்கள் சபிக்கும்போது நாம் அவர்களைத்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

திரும்பி சபிக்காமல் ஆசீர்வதிக்க வேண்டுமென்று வேதம் கூறுகிறது. "நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு." என்று பவுல் கூறுகிறார். (ரோமர் 12:21) தீமையை வெல்ல ஒரே சிறந்த வழி நன்மை செய்வதாகும்.

எங்களுடைய ஊழியத்தை யாராவது தாக்கினால் நாங்கள் இந்த வசனத்தை அடிக்கடி அறிக்கையிடுவோம்: உபாகமம் 33:25-27.

> ***[25]இரும்பும் வெண்கலமும் உன் பாதரட்சையின் கீழிருக்கும்; உன் நாட்களுக்குத்தக்கதாய் உன் பெலனும் இருக்கும் என்றான்.***
>
> ***[26]யெஷுரனுடைய தேவனைப்போல் ஒருவரும் இல்லை; அவர் உனக்குச் சகாயமாய் வானங்களின்மேலும் தமது மாட்சிமையோடு ஆகாய மண்டலங்களின் மேலும் ஏறிவருகிறார்.***
>
> ***[27]அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்; அவர் உனக்கு முன்னின்று சத்துருக்களைத் துரத்தி, அவர்களை அழித்துப்போடு என்று கட்டளையிடுவார்.***

இவ்வகையான அறிவிப்பு உண்மையில் சாத்தானை நடுங்கச்செய்யும். நம்முடைய போராட்டம் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் அந்தகார லோகாதிபதிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு. தேவன் உபயோகிக்கும் ஆயுதங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. ஆனால் அவற்றைச் சரியான முறையில் நாம் உபயோகிக்க வேண்டும்.

பொருளாதார மற்றும் சரீர தேவைகள்

நமக்கு பல்வேறு வகையான தேவைகள் இருக்கலாம்; பொருளாதார மற்றும் சரீரத் தேவைகள் போன்றவை.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

பொருளாதாரத் தேவைகளுக்கு *2* கொரிந்தியர் *9:8*ஐ நான் அறிக்கையிடுவேன்.

> ***8நீங்கள் (நான்) எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் (என்னிடத்தில்) சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்.***

தேவன் வல்லவராயிருக்கிறார் என்ற எளிய வார்த்தைகளைக் கூறி இவ்வசனம் ஆரம்பமாகிறது. பின்பு அவர் எதைச் செய்ய வல்லவர் என்று கூறுகிறது. எல்லாம் கிருபையே - கிருபையை எப்படி பெற்றுக் கொள்கிறோம்? இதனைப் பெற நம்மைத் தகுதிப்படுத்தவோ சம்பாதிக்கவோ முடியாது. சமுதாயத்தில் நமது நிலையின் அடிப்படையில் இது கிடைக்காது. தேவ கிருபையினாலே எல்லாவற்றையும் விசுவாசத்தினாலே நாம் பெற்றுக் கொள்ளுகிறோம். எங்களுடைய ஊழியத்தின் பொருளாதாரத் தேவைகளைச் சந்திக்கும் அடித்தள உண்மை இந்த வசனம் தான்.

உங்களால் நிறைவேற்ற முடியாது என்று நீங்கள் நினைக்கிற சவாலான ஒரு சூழலை நீங்கள் சந்திக்க நேரிடுகிறது என்று வைத்துக் கொள்ளுவோம். அந்த சூழ்நிலையைச் சந்திக்கத் தேவையான கல்வி, சரீர பெலன், ஞானம் உங்களுக்கு இல்லை என நீங்கள் உணரலாம்.

இந்த மாதிரி சூழ்நிலைகளில் நாங்கள் பிலிப்பியர்*4:13*ஐப் பற்றிப் பிடித்துக் கொள்ளுவோம். இது ஒரு முக்கியமான வசனம். எனக்கு கிரேக்க மொழி நன்கு தெரியும். எனவே எல்லா மொழிபெயர்ப்புகளிலும் கூறப்பட்டுள்ளதைவிட சிறப்பாக நான் இதனை மொழிபெயர்க்க தேவன் எனக்கு ஞானத்தைக் கொடுத்துள்ளார் என்று நம்புகிறேன்.

எனக்குள்ளாக இருந்து எனக்கு ஆற்றல் அளிப்பவராலே எல்லாவற்றையும் சாதிக்க எனக்கு பெலனுண்டு.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

"ஆற்றல் அளிக்கிற" என்ற வார்த்தையை நான் உபயோகிக்கக் காரணம்: "ஆற்றல்" என்று அர்த்தம் கொள்ளும் 'டுனாமீஸ்' என்ற கிரேக்க வார்த்தை இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளதால்தான்.

நீங்கள் அறிவிப்பதன் மூலம் உங்களிலுள்ள வல்லமை வெளிப்படுத்தப்படுகிறது. எனக்குக் கல்வியோ, பெலனோ, ஊக்கமோ இல்லாதபோதும் இக்காரியத்தை நான் செய்யவேண்டுமென்பது தேவ சித்தமாயிருக்குமாயின் என்னை பெலப்படுத்துகிறவராலே இதனை நான் செய்ய முடியும்.

நீங்கள் ஒரு வேளை ஒரு குறிப்பிட்ட சுகவீனத்தால் பாதிப்படைந்திருக்கலாம். சுகமாக்கும் வல்லமை குறித்த ஓர் அருமையான வசனம் 1 பேதுரு 2:24ஆகும்.

> ***24நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.***

இது இறந்த காலத்தைக் குறிப்பதாக வருவதைக் கவனியுங்கள். சுகமளிப்பதைக் குறித்து வேதம் கூறும்போதெல்லாம் எதிர்காலத்தில் ஒருபோதும் கூறுவதில்லை. இயேசுவுக்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன் ஏசாயா "அவருடைய தழும்புகளால் குணமானோம்" என்று கடந்த காலத்தில் கூறுகிறார். பேதுரு நமக்காக இயேசு பலியானதைக் குறித்துக் கூறும்போது அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் என்று கூறுகிறார்.

இது ஒரு வித்தியாசமான காட்சியை நமக்கு அளிக்கிறது. தானாகவே நீங்கள் சுகவீனத்திலிருந்து விடுதலை பெறுவதாக அதற்கு அர்த்தமல்ல. ஆனால் சுகவீனத்தை எதிர்த்து நின்று சவால்விட உங்களுக்கு இது ஒரு ஆணித்தரமான அடிப்படையைத் தருகிறது.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சில சமயங்களில் இந்த வசனத்தை பல காலம் நீங்கள் கூறிக் கொண்டிருக்க நேரிடும். தேவனுடைய வார்த்தையை நம்பப்போகிறீர்களா அன்றி சரீர நோயின் அறிகுறிகளை ஏற்றுக் கொள்ளப்போகிறீர்களா என்பதை நீங்கள் தான் முடிவெடுக்க வேண்டும்.

உள் நாடு, உலக நாடுகள் சார்ந்த நடைமுறைகள் பற்றிய அறிக்கைகள்

இனி நாம் காண இருப்பது அதிக விழிப்புடன் செயற்பட வேண்டிய காரியமாகும். தேசீய மற்றும் சர்வதேச நிகழ்ச்சிகளில் நமது பங்கு குறித்து நான் குறிப்பிட விரும்புகிறேன். ரூத்தும் நானும் எங்கள் சொந்த காரியங்கள் தவிர மற்ற காரியங்களுக்காகவும் முக்கியமாக நாடுகள் குறித்த காரியங்களுக்காகவும் ஜெபிப்போம். இது குறித்த சில வேத வாக்கியங்களை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

எனக்குப் பிடித்த வேத பகுதிகளில் ஒன்று தானியேல் 2:20-22 தானியேல் 4: 34, 35ல் உள்ளது. முதலாவது தானியேலும் இரண்டாவதாக நேபுகாத் நேச்சாரும் பேசுகின்றனர். ஆனால் செய்தி ஒன்றே.

[20]பின்பு தானியேல் சொன்னது: தேவனுடைய நாமத்துக்கு என்றென்றைக்கும் உள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரமுண்டாவதாக; ஞானமும் வல்லமையும் அவருக்கே உரியது.

[21]அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர்; ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர்; ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர்.

[22]அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர்; இருளில் இருக்கிறதை அவர் அறிவார்; வெளிச்சம் அவரிடத்தில் தங்கும்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

4:34 . . .அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும்.

4:35 பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள்; அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார்; அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி: என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை என்றேன்.

மேற்கூறிய வசனங்களின் இரண்டாவது பகுதியைக் கூறியவர் வெகுநாட்களாக ஓர் அவிசுவாசியாக இருந்தவர். எவ்வாறு ஜெபிப்பது என்று நமக்குத் தெரிந்திருந்தால் தீமையான ஆட்சியாளர்களையும் தேவன் மாற்றுவார் என்பதை நாம் அறிந்து இதன் மூலம் ஊக்கம் பெறலாம்.

2 நாளாகம புத்தகத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன. அவைகள் ஒரே வசனத்தில் கூறப்பட்ட ஜெபங்களாகும். குறிப்பிட்ட காரியங்களுக்காக ஜெபிக்கும் முன்பதாக இந்த ஜெபத்தை நாங்கள் கூறுவோம். முதலாவது 2 நாளாகமம் 14:11ல் உள்ள வசனம்:

11 ஆசா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவிசெய்கிறது உமக்கு லேசான காரியம்; எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்குத் துணைநில்லும்; உம்மைச் சார்ந்து உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராக வந்தோம்; கர்த்தாவே, நீர் எங்கள் தேவன்; மனுஷன் உம்மை மேற்கொள்ளவிடாதேயும் என்றான்.

இரண்டாவது வசனம் 2 நாளாகமம் 20:6ல் உள்ளது.

கர்த்தாவே, பரலோகத்திலிருக்கிற நீர் அல்லவோ தேவன்; தேவரீர் ஜாதிகளுடைய ராஜ்யங்களையெல்லாம் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது, ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக்கூடாது.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இனி சங்கீதம் 33:8-12ஐ கவனிப்போம். இவ்வுலகக் காரியங்களைப் பற்றி நாம் சிந்திக்கையில் இந்த வசனம் மிகவும் வல்லமையுள்ளதாக இருக்கும்.

8பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக; உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக.

9அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்.

10கர்த்தர் ஜாதிகளின் ஆலோசனையை விருதாவாக்கி, ஜனங்களுடைய நினைவுகளை அவமாக்குகிறார்.

11கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும்.

12கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக்கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்து கொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது.

வேறுவகையாகக் கூறினால், இவற்றிலெல்லாம் வெற்றி பெற்று மேலே வருவது யார்? எந்த தேசம் கர்த்தரை தெய்வமாகக் கொண்டுள்ளதோ அந்த தேசமே. அரசியல்கள், நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் சபையின் திட்டங்கள் முதலானவை தேவனுடைய திட்டத்திற்கு எதிராக இருக்குமென்றால் அவையெல்லாம் நிலை நிற்காது.

எதிர்ப்பு சக்திகள் பற்றிய அறிக்கை

கடைசியாக, கடந்த சில ஆண்டுகளாக நாங்கள் அதிகமாக ஜெபித்த இஸ்ரவேல் நாட்டைக் குறித்த சில வசனங்களைப் பற்றிக் கூற விரும்புகிறேன். எங்களைப் போன்று உங்களுக்கு அந்த அளவு பாரம் இல்லாவிட்டாலும், இதிலுள்ள காரியங்களை எடுத்துக்கொண்டு தனிப்பட்ட உங்களுடைய சூழ்நிலைகளில் பயன்படுத்திப் பாருங்கள்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சுவிசேஷத்தின் காரியங்களைப் போதிப்பதில் மிகவும் கடினமான பகுதிகளாக மத்திய கிழக்கு நாடுகளும் வட ஆப்பிரிக்கா பகுதியும் உள்ளன. இதற்கு ஒரு முக்கிய காரணம் இருப்பதாக நான் நம்புகிறேன்.

உலக முழுவதிலும் உள்ள மசூதிகளில் ஒவ்வொரு நாளும் ஐந்து முறை "அல்லாவும் முகமதுவும் தவிர வேறு கடவுள் இல்லை" என்று கூறி அறிவிக்கப்படுவதை நீங்கள் அறிவீர்கள். இந்த அறிவிப்பு 1400 ஆண்டுகளுக்கு மேலாக தினமும் கூறப்பட்டு வருகிறது. எனவே பல நூற்றாண்டுகளாக கோடிக்கணக்கான முறை இவ்வாறான அறிக்கை தொடர்ந்து கூறப்பட்டு வருகிறது.

ஏன் அப்பகுதியில் அப்படிப்பட்ட ஒரு வல்லமை நிலவுகிறது என்பதற்குக் காரணத்தை நீங்கள் இதன் மூலம் அறிந்து கொண்டிருப்பீர்கள். இதற்குக் காரணம் என்ன? கூறி அறிவிப்பதன் வல்லமை தான் என்று நான் நம்புகிறேன். அறிக்கையிடும் காரியங்களை யார் செய்கிறார்களோ அவர்கள் கூறும் காரியங்களே இறுதியில் நடைபெறுகிறது.

மோசேயும் எகிப்திய மந்திரவாதிகளும் செய்த காரியங்களில் இது தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்கெனவே நாம் விளக்கமாகப் பார்த்திருக்கிறோம். மோசேயைப் போலவே எகிப்திய மந்திரவாதிகளும் தங்களுடைய கோல்களைக் கீழே போட்டு பாம்புகளாக மாறும்படி செய்திருந்தாலும், மோசேயின் பாம்பு மந்திரவாதிகளின் பாம்புகளை விழுங்கிவிட்டது. ஏன்? மந்திரவாதிகளின் மூலமாக செயல்பட்ட அந்தகார சக்திகளைக் காட்டிலும் மோசேயின் மூலமாக செயல்பட்ட தேவனுடைய வல்லமை மிகப் பெரியதாக இருந்தது. தேவன் தமது வாக்கைக் காப்பாற்றினார்.

எரேமியா ஓர் இளைஞனாக இருக்கும்போது, நாடுகளுக்கு தீர்க்கதரிசியாக தேவன் அவரை அழைத்தார்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தமது வார்த்தையை இவர் மூலம் நிறைவேற்றுவதாக வாக்களித்தார். "நான் எனது வார்த்தை நிறைவேறுவதை கவனிப்பேன்" என்று எரேமியாவிடம் கூறுகிறார். வேறு ஒரு மொழிபெயர்ப்பும் "எனது வார்த்தையை நிறைவேற்ற நான் ஆயத்தமாயிருக்கிறேன்" என்று கூறுகிறது. வசனத்தைக் கூறி அறிவிப்பது எவ்வாறு என்பதையும் முக்கியமாக தேவன் தமது வசனத்தை நிறைவேற்றிக் காப்பார் என்பதையும் நாம் அறிந்திருந்தால், நாம் அறிவிக்கும் தேவனுடைய வார்த்தை நிலைநிற்கும். வழிமுறைகளைக் காட்டிலும் உறவு முறை மிகவும் முக்கியம்.

இஸ்ரவேலைக் குறித்தும் இஸ்ரவேல் நாட்டை குறித்தும் கூறப்பட்டுள்ள இரண்டு முக்கிய வேதபகுதிகளைப் பற்றி நான் கூற விரும்புகிறேன். முதலாவது அது சங். 125:3ல் வருகிறது.

[3]ஆகாமியத்தின் கொடுங்கோல் நீதிமான்களுடைய சுதந்தரத்தின்மேல் நிலைத்திராது.

இங்கே கூறப்பட்டுள்ள ஆகாமியத்தின் கொடுங்கோல் என்பது கிறிஸ்தவர்களுக்கெதிரான சக்தியைக் குறிப்பதாகும். நமக்கு எதிராக காரியங்கள் இருக்கும்போது இந்த வசனத்தை நாம் வாயால் அறிக்கையிட வேண்டும். இதனைச் சொல்ல இப்படிப்பட்ட சந்தர்ப்பமே மிகச் சரியானதாகும். இப்படிச் செய்யும்போது, உங்களுடைய அதிகாரத்தின் கோலை நீட்டுகிறீர்கள் என்று நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். உங்களுடைய கோல் அல்லது பாம்பு மந்திரவாதிகளின் பாம்புகளை விழுங்கிவிடும்.

இஸ்ரவேலைக் குறித்த மற்றொரு அறிவிப்பு சங்கீதம் 129:5-6ல் உள்ளது.

[5]சீயோனைப் பகைக்கிற அனைவரும் வெட்கிப் பின்னிட்டுத் திரும்பக்கடவர்கள்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

[6]வீட்டின்மேல் முளைக்கும் புல்லுக்கு அவர்கள் ஒப்பாவார்களாக; அது வளருமுன் உலர்ந்துபோம்.

இதனால் நான் சீயோனை எதிர்ப்பவர்களையெல்லாம் எச்சரிப்பது என்னவென்றால், அவர்கள் முழுவளர்ச்சி அடைய முடியாது. அவர்கள் முழு வளர்ச்சி அடையுமுன்பே கருகிப்போவார்கள். இதுதான் தேவனுடைய வார்த்தை. இது நிறைவேறப்போகிறது.

இஸ்ரவேல் மீண்டும் கட்டப்படுவது குறித்து இன்னொரு வேத வாக்கியத்தைக் கூற விரும்புகிறேன். அது எரேமியா 31:7ல் உள்ளது.

[7]கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: யாக்கோபினிமித்தம் மகிழ்ச்சியாய்க் கெம்பீரித்து, ஜாதிகளுடைய தலைவரினிமித்தம் ஆர்ப்பரியுங்கள்; சத்தத்தைக் கேட்கப்பண்ணி, துதித்து: கர்த்தாவே, இஸ்ரவேலில் மீதியான உமது ஜனத்தை இரட்சியும் என்று சொல்லுங்கள்.

இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள வினைச் சொற்களைக் கவனியுங்கள்: கெம்பீரித்தல், ஆர்ப்பரித்தல், துதித்தல். இந்தக் காரியங்களில் நாம் ஈடுபட முடியும். அறிவித்தல் (சத்தத்தைக் கேட்கப்பண்ணி) என்ற வார்த்தை எப்படி உபயோகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை கவனியுங்கள். எரேமியா 31:10வது வசனத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

[10]ஜாதிகளே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, தூரத்திலுள்ள தீவுகளில் அறிவித்து, இஸ்ரவேலைச் சிதறடித்தவர் அதைச் சேர்த்துக் கொண்டு, ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும்வண்ணமாக அதைக் காப்பார் என்று சொல்லுங்கள்.

இதை நாம் எல்லா நாடுகளிலும் கூறி அறிவிக்க வேண்டும். முக்கியமாக ஆப்பிரிக்காவிலிருந்து மத்திய கிழக்கு நாடுகள் ஆசியாவின் பெரும்பகுதியை உள்ளடக்கிய

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சுவிசேஷம் எட்டியிராத பகுதிகளிலுள்ள மக்களுக்கு இதைக் கூற வேண்டும். இஸ்ரவேலைச் சிதறடிக்க அனுமதித்த அதே தேவன் தற்போது அவர்களைக் கூட்டிச் சேர்க்கிறார். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் தேவனுடைய வாக்கின் உண்மையையும் அது நிறைவேறுவதையும் அறிவிப்பதில் நமக்கு முக்கியப் பொறுப்பு உள்ளது.

நடைமுறையில் பயன்படுத்துதல்

ரூத்தும் நானும் எங்களுடைய திருமண வாழ்வில் இருபது ஆண்டுகளாக தனிப்பட்ட வாழ்விலும் பொது வாழ்விலும் நாங்கள் அறிக்கை செய்த தேவனுடைய வார்த்தைகளைக் குறித்து உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அந்த அறிக்கைகளை தொகுத்து வரிசைப்படுத்தி உங்களுடைய தேவைக்கேற்ப பயன்படுத்தும் வகையில் கொடுத்துள்ளேன். அவைகள் நூற்றுக்கும் மேற்பட்டவைகள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாக நீங்கள் பயன்படுத்தினாலும் நான்கு மாதங்களுக்கு தேவையான அறிக்கைகள் உள்ளன. பிறகு மீண்டும் ஆரம்பத்திலிருந்து மீண்டும் அவைகளைப் பயன்படுத்தலாம்.

உதாரணமாக சில அறிவிப்புகளைச் சேர்த்து அவற்றை தேவனுடைய பாதுகாப்பு குறித்த நம்பிக்கை பற்றிய அறிவிப்பு என்ற தலைப்பின்கீழ் தொகுத்துள்ளேன். இவற்றை நான் ஒழுங்காகப் பயன்படுத்தி என் வாழ்வில் மிகவும் பயனுள்ளவைகளாகக் கண்டுள்ளேன்.

இந்த வசனங்களைத் தங்கள் வாழ்வில் பயன்படுத்தி எப்படி அவைகள் தங்களுக்கு பயனுள்ளவைகளாக இருந்தன என்பது பற்றியும் இவற்றை உபயோகிக்கும்போது தேவனுடைய பிரசன்னத்தை எப்படி உணர்ந்தனர் என்பது குறித்தும் அநேக சாட்சிக் கடிதங்கள் எங்களுக்கு வந்துள்ளன.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இந்த வசனங்களையும் இந்தப் புத்தகத்தில் தொகுத்து அளிக்கப்பட்டுள்ள வேறு அறிவிப்புகளையும் தியானித்து விசுவாசத்தோடு உங்கள் வாழ்க்கையில் பயன்படுத்துமாறு உங்களை ஊக்குவிக்கிறேன். காலையில் எழுந்தவுடனும் இரவில் படுக்கைக்குப் போகுமுன்பதாகவும் இவற்றை நீங்கள் பயன்படுத்தலாம். அவற்றைச் சாதாரணமாக வாசிப்பதைவிட உரக்கச் சத்தமாகப் படிப்பது அதிகப் பயனுள்ளதாக இருக்குமென்று நம்புகிறேன். அநேக முறை திருப்பித் திருப்பி கூறி அறிக்கையிடுவதின் மூலம் அந்த வசனங்கள் உங்கள் ஆவியில் ஆழமாகப் பதிந்துவிடும்.

தேவ பாதுகாப்பில் உள்ள நம்பிக்கையைப் பற்றிய விசுவாச அறிக்கை

எனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும். எனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நான் குற்றப்படுத்துகிறேன். இது கர்த்தருடைய ஊழியக்காரனாகிய என்னுடைய சுதந்திரம். சேனைகளின் கர்த்தராகிய உம்மிடமிருந்து என் நீதி வருகிறது.

எனக்கு விரோதமாகப் பேசுபவர்களையும், எனக்கு விரோதமாக ஜெபிக்கின்றவர்களையும், எனக்கு தீமையும் கேடும் உண்டாக வேண்டும் என விரும்புபவர்களையும், என்னை ஒதுக்கித் தள்ளியவர்களையும் நான் மன்னிக்கிறேன். [1]அவர்களை மன்னித்து கர்த்தருடைய நாமத்திலே அவர்களை ஆசீர்வதிக்கிறேன்.

இப்பொழுதும் கர்த்தாவே நீர் மட்டுமே என் கர்த்தர் என்றும், என்னுடைய இரட்சகர் என்றும், உம்மைத் தவிர வேறே தேவர்கள் இல்லையென்றும் நான் அறிக்கையிடுகிறேன். நீர் நீதியுள்ள தேவன், இரட்சகர்,

[1]மத்தேயு 5:43-45; ரோமர் 12:14

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவராகிய உம்மை நான் ஆராதிக்கிறேன்.

நான் என்னைப் புதிதாக இந்த நாளில்/ இந்த இரவில் எந்தவித நிபந்தனையுமின்றி கீழ்ப்படிதலுக்கு ஒப்புக் கொடுக்கிறேன். உமக்கு ஒப்புக் கொடுத்ததின் அடிப்படையில் நான் உம்முடைய வார்த்தையின்படி செய்ய விரும்புகிறேன். நான் பிசாசையும் அவனுடைய நெருக்குதல்களையும், அவன் தாக்குதல்களையும், அவன் தரும் பிரச்சனைகளையும், அவன் தரும் ஏமாற்றங்களையும், அவன் எனக்கு விரோதமாகப் பயன்படுத்தும் ஒவ்வொரு ஆயுதத்தையும், நபரையும் எதிர்க்கிறேன். அதற்கு நான் என்னை ஒப்புக் கொடுக்க மறுக்கிறேன்! அவனுக்கு எதிர்த்து நிற்கிறேன். இயேசுவின் நாமத்தில் அவனை விரட்டி அவனை ஒதுக்கி வைக்கிறேன்.

சிறப்பாக நான் எதிர்த்து தள்ளிவைப்பது: பெலவீனம், வலி, தொற்று நோய், வீக்கம், வேண்டாத வளர்ச்சி, ஒவ்வாமை, நுண் கிருமிகள், எல்லாவிதமான பில்லி சூனியங்கள்.

இறுதியாக கர்த்தாவே, இயேசு கிறிஸ்துவின் சிலுவையின் தியாக மரணத்தினாலே நான் சாபத்திலிருந்து நீங்கி, நீர் சகலவிதத்திலும் ஆசீர்வதித்த ஆபிரகாமின் ஆசீர்வாதங்களுக்குள் கடந்து வருகிறேன். அவை உயர்வு, ஆரோக்கியம், கனிதரும் தன்மை, வளமை, வெற்றி, தேவ சமுகையாக உள்ளன. ஆமென்.[2]

கீழ்க்கண்ட வேதவசன அறிக்கைகளை எங்கள் சொந்த வாழ்க்கையில் பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளோம். நாங்கள் மனப்பாடம் செய்துள்ள வேத பகுதிகளை பரிசுத்த ஆவியானவர் வழி நடத்துதல்படி கீழே தந்துள்ளோம்.

[2]*கலாத்தியர் 3:13, 14; ஆதியாகமம் 24:1*

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வேத பகுதிகள் கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

கர்த்தருக்குப் பயப்படும் பயம்

நீதியும் பரிசுத்தமும்

சுகமும் பலமும்

நடத்துதல், பாதுகாப்பு, பத்திரப்படுத்துதல்

மனிதனின் காரியங்களில் தேவனின் தலையீடு

சோதனைகள்

ஆவிக்குரிய போராட்டம்

முழுமையான மீட்பு

மனம் மற்றும் உணர்ச்சி ரீதியான உறுதிப்பாடு

தேவனுக்கு ஊழியம் செய்தல்

கடைசியாக எனக்கு மிகவும் பிரியமான மூன்று முக்கிய அறிவிப்புகள் உள்ளன.

சிறிது காலம் சென்றபின்பு உங்களுக்கு என்று பரிசுத்த ஆவியானவர் சிறப்பாக சில வசனங்களைச் சுட்டிக்காட்டுவார். இந்தப் புத்தகத்தின் இறுதியில் காலியாக விடப்பட்டுள்ள பகுதிகளில் உங்களுடைய தனிப்பட்ட ஜெபங்களையும் வேத வாக்கியங்களையும் குறித்து வையுங்கள்.

இந்த வேத பகுதிகளெல்லாம் எங்களுக்கு எவ்வளவு பயனுள்ளதாக இருந்தனவோ அந்த அளவுக்கு உங்களுக்கும் பயனுள்ளவைகளாக இருக்கும். வெற்றிக்கும் தோல்விக்கும் உள்ள வித்தியாசத்தை இவைகள் உணர்த்தும்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வேத பகுதிகளை உபயோகிப்பது குறித்த ஆசிரியரின் ஆலோசனைகள்

இந்த புத்தகத்தை எல்லா சமயங்களிலும் உங்கள் பாக்கெட்டிலோ, கைப்பையிலோ, காரிலோ, படுக்கையிலோ எங்கெல்லாம் உங்களுக்கு எளிதில் எடுத்துப் படிக்க முடியுமோ அங்கெல்லாம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

ஒரு நாளுக்கு ஓர் அறிவிப்பு / வசனம் எடுத்துப் பயன்படுத்துவேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ளுங்கள். அடிக்கடி பயன்படுத்தும்போது வசனங்களை நீங்கள் மனப்பாடம் செய்ய அது உதவியாக இருக்கும்.

உங்கள் இருதயத்தை ஆயத்தப்படுத்துங்கள்

ஏசாயா 66:2ஐ ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்:

[2]என்னுடைய கரம் இவைகளையெல்லாம் சிருஷ்டித்ததினால் இவைகளெல்லாம் உண்டாயின என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன்.

மனத்தாழ்மை நம்மை இவ்வறிக்கையின் மூலம் வெற்றி காண்பதற்கு நம்மை ஆயத்தப்படுத்தும். வசனங்களை வாயினால் அறிக்கையிடும்போது தேவன் நம்மோடு பேசவேண்டுமென்று விரும்புவோமென்றால் நமது ஆவியில் அமைதலாயிருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். இந்த நிலை தானாக ஏற்படாது. நமது மனதை இங்குமங்குமாக

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அலைக்கழிக்கும் எண்ணங்களை அப்புறப்படுத்தி தேவனுக்கு காத்திருக்கும்போது "மெல்லிய அமர்ந்த தேவனுடைய குரலை" நாம் கேட்க முடியும். *(1 இராஜாக்கள் 19:11-13)* இவ்விதமாக அந்தந்த சமயத்திற்கு ஏற்றாற்போல் நாம் உபயோகிக்க வேண்டிய தேவனுடைய வார்த்தையைக் குறித்து நாம் அறிந்து கொண்டு அப்படிப்பட்ட சூழ்நிலைக்கேற்ப தேவன் கிரியை செய்ய நாம் அவருக்கு இடம் கொடுக்க வேண்டும்.

மனனம் செய்து தியானிக்கவும்

[1]துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்,

[2]கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங்கீதம் 1:1-2)

"தியானம்" என்ற வார்த்தைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள எபிரெயச் சொல் "காஹா" என்பதாகும். அதற்கு ஆழ்ந்த சிந்தனை அல்லது முணுமுணுப்புடன் படித்தல் என்று பொருள். இதற்கு வார்த்தையை கவனமாகப் படித்து, இருதயத்தில் அதனை ஏற்றுக் கொண்டு, கீழ்ப்படிந்து நடத்தல் என்பது பொருள். வார்த்தையை எவ்வளவுக்கு அதிகமாக தியானிக்கிறோமோ அவ்வளவுக்கதிகமாக அந்த வார்த்தையின் ஆக்கியோனைப்பற்றி அறிந்து கொள்வோம். இதனால் நமது யோசனைகள் தேவனுடைய யோசனையோடு அதிகமதிகமாக இணைந்துவரும்.

தேவனுடைய வார்த்தையின் மூலம் நம்மை நடத்தும்படி பரிசுத்த ஆவியானவரை அழைத்தல்

பரிசுத்த ஆவியானவரை எதற்காக பிதா அனுப்பினார் என்பதை இயேசு விளக்கமாகக் கூறினார்:

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

[26]என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். (யோவான் 14:26)

இயேசு உலகத்தில் இருந்தபோது அவருடைய சீஷர்கள் புரிந்துகொள்ள முடியாத அநேக காரியங்களை அவர்களுக்கு விளக்கிக் காட்டினார், இருப்பினும் பரிசுத்த ஆவியானவர் அவர்களுடன் வந்து தங்கும்போது அவர்களுக்கு தனிப்பட்ட ஆசிரியராகவும், இயேசு கற்றுக் கொடுத்த காரியங்களை சரியாகப் புரிந்து கொண்டு ஞாபகம் வைத்துக் கொள்ளவும் அவர் உதவுவார் என இயேசு வாக்களித்தார். பரிசுத்த ஆவியானவர் வேத வாக்கியங்களை விளக்கிக் காட்டுவார் என்பதைக் குறித்து யோவான் 16:13ல் இயேசு கூறுகிறார்.

[13]சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்;

பெந்தேகொஸ்தே நாளின்போது பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டபோது சீஷர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட பெருத்த மாற்றம் இதனை தெளிவாக நமக்குக் காட்டுகிறது. அன்று நடைபெற்ற வல்லமையான காரியங்களைக் காணும்போது இதற்குக் காரணமென்ன? என்ற கேள்வி எழுகிறது. பரிசுத்த ஆவியானவருடைய ஏவுதலால், யோவேல் தீர்க்கதரிசனத்திலுள்ள ஒரு பகுதியை பேதுரு கூறி அதனை விளக்குகிறார்.

"கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்". (அப்போஸ்தலர் 2:17)

பரிசுத்த ஆவியானவர் சீஷருடன் தங்கியிருக்க வந்தபோது வேதவாக்கியங்களைக் குறித்த அவர்களுடைய அறிவு இயற்கைக்கு மாறாக பிரகாசமடைந்தது. இதற்கு முன்பதாக அவர்களுக்கிருந்த சந்தேகங்களும்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

குழப்பங்களும் அவர்கள் பெற்ற ஆவியின் மூலமாக உடனடியாகத் தீர்வு பெற்றன. இன்றைக்கும் இது நடைமுறைக்கு ஏற்றதாக உள்ளது. வார்த்தையும் பரிசுத்த ஆவியானவரும் ஒன்று சேர்ந்து கிரியை செய்யும் போது அது ஒரு வல்லமையான இணைப்பாகும்.

எபேசியர் **6:17**ல் பவுல் தேவனுடைய வார்த்தையை ஆவியின் (பரிசுத்த) பட்டயம் என்று கூறுகிறார். தேவனுடைய வார்த்தையை உங்களுடைய வாயின் அறிக்கையால் நீங்கள் எடுத்து உபயோகிக்கலாம். ஆனால் உங்களிலுள்ள பரிசுத்த ஆவியானவர் அதை எடுத்துப் பயன்படுத்தும்போதுதான் அதன் முழுப்பயனும் நமக்குக் கிடைக்கும்.

ஆவியின் பட்டயத்தை எப்படி நாம் உபயோகப்படுத்த வேண்டும் என்பதற்கு இயேசு வனாந்தரத்தில் சாத்தானோடு எப்படி பேசி வெற்றி பெற்றார் என்பது சரியான எடுத்துக்காட்டாகும். இயேசுவை சாத்தான் மூன்று முறை சோதித்தபோது, ஒவ்வொருமுறையும் "அது எழுதப்பட்டிருக்கிறது" என்று கூறி சாத்தானை துரத்துகிறார்.

இயேசு 'ரேமா'வாகிய பேசப்பட்ட வார்த்தையாகிய வேத வாக்கியங்களைத் தவிர வேறு ஒரு ஆயுதத்தையும் பயன்படுத்தவில்லை. அந்தக்காலத்தில் மற்ற யூதர்களைப் போல இயேசுவும் நீண்ட தேவ வசனங்களை மனப்பாடம் செய்திருந்தார். சாத்தான் தன்னை எதிர்கொண்டபோது வேத அகராதியையோ ஒரு நூல்நிலையத்தின் உதவியையோ அவர் நாடவில்லை. தனது ஞாபக சக்தியில் அந்த வசனங்களை மனதில் வைத்திருந்தார்.

அதே ஆயுதம் - ஆவியின் பட்டயம் இன்று கிறிஸ்தவர்களாகிய நமக்கும் உள்ளது. பரிசுத்த ஆவியானவர் நாம் கற்றுக் கொண்ட, மனப்பாடம் செய்த வசனங்களை நமது ஞாபகத்துக்குக் கொண்டுவந்து சரியான நேரத்திற்கு ஏற்ப அவற்றைப் பயன்படுத்த உதவுவார்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இவ்வாறாக தேவன் தரும் வெற்றியை நாம் அனுபவிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

அறிக்கையிடுங்கள்/அதிகாரத்தைப் பயன்படுத்துங்கள்

வசனங்களைத் திரும்பத் திரும்ப கூறி அறிவியுங்கள். திரும்பத் திரும்ப கூறுவதன் மூலம் மனப்பாடம் செய்வதற்கு அது உதவுவதோடல்லாமல் விசுவாசத்தையும் நன்கு கட்டியெழுப்பும். "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்." (ரோமர் 10:17) இந்த அறிவிப்புகளை அதிகாரத்தோடும், பரிசுத்த ஆவியின் நிறைவோடும் திரும்பத் திரும்ப கூறுங்கள்.

இது ஒரு வல்லமையான சக்தி வாய்ந்த ஆயுதமாகும்.

[12]தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. (எபிரெயர் 4:12)

மேலும், ஏன் தேவன் நமக்கு நாவைக் கொடுத்துள்ளார்? என்று நீங்கள் சிந்தித்திருக்கிறீர்களா? தேவனுடைய நோக்கத்தை நமது நாவின் மூலம் எப்படி நிறைவேற்றலாம்? தாவீது சங்கீதம் 16:8-9ல் இவ்வாறு கூறுகிறார்.

[8]கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை.

[9]ஆகையால் என் இருதயம் பூரித்தது, என் மகிமை களிகூர்ந்தது; என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் இறங்கிய போது அங்கு கூடியிருந்த மக்கள் என்ன நடக்கிறது என்று பார்த்துக்கொண்டிருந்தனர். பேதுரு தன்னுடைய மிகவும் பிரசித்தி பெற்ற பிரசங்கத்தைச் செய்தார். இயேசுவைப் பற்றி அவரது வாழ்க்கை, மரணம் உயிர்த்தெழுதல் ஆகிய காரியங்களைக் குறித்துக் குறிப்பிட்டார். பழைய ஏற்பாட்டிலிருந்து பல வசனங்களைக் குறிப்பிட்டு இயேசுவே மேசியா என்றும் தேவனுடைய குமாரன் என்றும் நிரூபித்துக் காட்டினார்.

அவ்வாறு அவர் குறிப்பிட்டுப் பேசிய பழைய ஏற்பாட்டுப் பகுதியில் ஒன்று சங்கீதம் **16:8-9**. பேதுரு இவ்வசனத்தை அப்போஸ்தலர் **2:25-26**ல் குறிப்பிடுகிறார்.

> ***[25]அவரைக்குறித்துத் தாவீது: கர்த்தரை எப்பொழுதும் எனக்குமுன்பாக நிறுத்தி நோக்கிக் கொண்டிருக்கிறேன்; நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலதுபாரிசத்திலே இருக்கிறார்;***
>
> ***[26]அதினாலே என் இருதயம் மகிழ்ந்தது, என் நாவு களிகூர்ந்தது, என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்;***

இந்த இரண்டு வேத பகுதிகளையும் நாம் கவனிப்போம். "என் மகிமை களிகூர்ந்தது" என்று கூறப்பட்டுள்ளது. தாவீது "என் மகிமை" என்று கூறுவதை பரிசுத்த ஆவியானவரின் நிறைவினால் "என் நாவு" என்று பேதுரு கூறுகிறார்.

இது நமக்கு மிகவும் முக்கியமான ஒரு காரியத்தைக் கூறுகிறது: நமது நாவு நமது மகிமையாகும். ஏன் என்று நீங்கள் கேட்கலாம். ஏனெனில் நம்மைப் படைத்த தேவன் நமக்கு நாவைக் கொடுத்ததன் தலையாய நோக்கம் - அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்பதே. நாவின் ஒரு நோக்கம்: அதன் மூலம் நீங்களும் நானும் அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்பதே. இதனாலேயே நமது

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

நாவு நமது மகிமையாக மாறுகிறது. மற்ற எல்லா உறுப்புகளையும் விட நாவின் மூலமாக நமது சிருஷ்டிகரை மகிமைப்படுத்தலாம்.

வாழ்வும் சாவும் நமது நாவில் தான் உள்ளது. எண்ணாகமம் 13 மற்றும் 14ஆம் அதிகாரத்தில் எதிர்மறையாகப் பேசினவர்கள் சாவுக்கும், தேவனுக்கு பிரியமாகப் பேசினவர்கள் வாழ்வுக்கும் நேராகக் கடந்து சென்றார்கள் என்று நாம் வாசிக்கிறோம். அவர்கள் என்ன பேசினார்களோ அதுவே அவர்களுக்குக் கிடைத்தது. எங்களால் முடியாது என்று சொன்னவர்களுக்கு முடியாமல் போனது, முடியும் என்று கூறியவர்களுக்கெல்லாம் கை கூடியது. எனவே உங்கள் நாவினின்று என்ன வார்த்தை வருகிறதோ அதுவே உங்கள் எதிர்காலத்தை நிர்ணயம் செய்கிறது.

[1]ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின் வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்.

[2]ஏனெனில், சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுபோல நமக்கும் அறிவிக்கப்பட்டது; கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை. (எபிரெயர் 4:1, 2)

எனவே நாவை சரியான வகையில் உபயோகிப்பது மிகவும் முக்கியம்.

எப்போது அறிவிக்க வேண்டும்

அறிக்கை செய்வதற்கு முதலில் சரியான நேரத்தை ஒதுக்குங்கள். அறிவிப்பதை ஒரு பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

எப்பொழுதெல்லாம் பரிசுத்த ஆவியானவர் வழி நடத்துகிறாரோ, அப்பொழுதெல்லாம் அறிக்கையிட வேண்டும்.

[26]என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். (யோவான் 14:26)

பரிசுத்த ஆவியானவர் சத்தியம் மற்றும் விசுவாசத்தின் ஆவியானவராவார். நமது வார்த்தைகளையும் பேச்சுக்களையும் கட்டுப்படுத்தி சரியான பாதையில் நடக்கும்போது அது அதிக பலனைத் தரும். அந்த வார்த்தை கனம் பெற்று நமது வாழ்வில் தேவனின் ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும்.

தேவனுடைய வார்த்தையை அறிவிக்க வேண்டிய சூழ்நிலைகள்:

தனி தியானத்தின் போது

- துக்கத்திலிருந்து எழுந்திருக்கும்போது
- தேவனுடைய பாதுகாப்பையும் அவர் பாராட்டிய நன்மைகளையும் அறிவித்தல்
- சுகத்திற்காகவும் பெலத்திற்காகவும் ஜெபித்தல்
- குடும்ப தியான சமயத்தில்
- சாப்பிடும் முன்பாக
- தனிமையில் இருக்கையில்
- தனிப்பட்ட முறையில் தேவை ஏற்படும்போது
- தேவனுடைய நடத்துதலை நாடும்போது
- இரவில் தூங்கச் செல்லும் முன்பதாக

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஆவிக்குரிய யுத்தத்தின் போது

- தனிப்பட்ட வேண்டுதல் ஜெபத்தின் போது
- உள்ளூர், தேசீய மற்றும் சர்வதேசப் பிரச்சனைகளின்போது
- ஆவியில் தாழ்ச்சி ஏற்படும் போது
- சோதனையின்போது
- தனிப்பட்ட, குடும்ப, சுகவீனமான சூழ்நிலைகளில் விசுவாசத்தைக் கட்டுவதற்காக
- ஜெபத்தில் உறுதியாகத் தரித்திருக்க
- சத்துருவின்மீது அதிகாரத்தைச் செலுத்த
- பிசாசுகளைத் துரத்தும் ஊழியத்தின் போது

சபை கூடுகையின்போது

- துதி மற்றும் ஆராதனையில்
- தேசீய மற்றும் சர்வதேச பிரச்சனைகளின் நேரத்தில்
- மனித உறவுகளில் தேவனுடன் இடைபட
- ஆலயத்திலோ வேலை செய்யுமிடத்திலோ, வீட்டிலோ நடைபெறும் ஜெபக் கூட்டங்களில்
- ஒரு குழந்தையை பிரதிஷ்டை செய்யும்போது
- ஒரு வீட்டை பிரதிஷ்டை செய்யும் போது
- ஒரு வேலை செய்யும் இடத்தை பிரதிஷ்டை செய்யும்போது

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வசன அறிக்கைகள்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

கர்த்தருக்குப் பயப்படும் பயம்

1. [28]...ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்; பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி. . . (யோபு 28:28)

2. [14]நானோ, கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நீரே என் தேவன் என்று சொன்னேன்.

[15]என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது;

[19]உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டுபண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது!

[20]மனுஷருடைய அகங்காரத்துக்கு அவர்களை உமது சமுகத்தின் மறைவிலே மறைத்து, நாவுகளின் சண்டைக்கு அவர்களை விலக்கி, உமது கூடாரத்திலே ஒளித்துவைத்துக் காப்பாற்றுகிறீர் . (சங். 31:14 15a, 19,20)

3. [10]கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; அவருடைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தியுண்டு; அவர் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும். (சங்கீதம் 111:10)

4. [1]என் மகனே, நீ உன் செவியை ஞானத்திற்குச் சாய்த்து, உன் இருதயத்தைப் புத்திக்கு அமையப்பண்ணும்பொருட்டு,

[2]நீ என் வார்த்தைகளை ஏற்றுக் கொண்டு, என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்தி,

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

[3]ஞானத்தை வா என்று கூப்பிட்டு, புத்தியைச் சத்தமிட்டு அழைத்து,

[4]அதை வெள்ளியைப்போல் நாடி, புதையல்களைத் தேடுகிறதுபோல் தேடுவாயாகில்,

[5]அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து, தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய் .
(நீதிமொழிகள் 2:1-5)

5. [7]கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள் .
(நீதிமொழிகள் 1:7)

6. [13]தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்; பெருமையையும், அகந்தையையும், தீய வழியையும், புரட்டு வாயையும் நான் வெறுக்கிறேன் . (நீதி. 8:13)

7. [26]கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திடநம்பிக்கை உண்டு; அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும்.

[27]கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவ ஊற்று; அதினால் மரணக்கண்ணிகளுக்குத் தப்பலாம் . (நீதி. 14:26,27)

8. [11]பிள்ளைகளே, வந்து எனக்குச் செவிகொடுங்கள்; கர்த்தருக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன்.

[12]நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி, நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன் யார்?

[13]உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்.

[14]தீமையை விட்டு விலகி, நன்மை செய்; சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்துகொள் . (சங்கீதம் 34:11-14)

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

9. [23]கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவனுக்கேதுவானது; அதை அடைந்தவன் திருப்தியடைந்து நிலைத்திருப்பான்; தீமை அவனை அணுகாது .
(நீதி. 19:23)

10. [4]தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம் .
(நீதி22:4)

11. [10]கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு.

[11]என்னாலே உன் நாட்கள் பெருகும்; உன் ஆயுசின் வருஷங்கள் விருத்தியாகும் . (நீதி 9:10-11)

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தனிப்பட்ட ஜெபமும் அறிக்கையிடுதலும்

POP.pmd 52 29-Apr-2013, 07:05 PM

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

நீதியும் பரிசுத்தமும்

12. [1]ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;

[2]அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

[22]நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும்,

[23]பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும்,

[24]புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள். (எபிரெயர் 12:1-2, 22-24)

13. [9]மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும்,

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

[10]தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி,

[11]நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன் . (பிலிப்பியர் 1:9-11)

14. [12]தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்.

[13]துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும்; அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன்.

[14]என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக . (சங்கீதம் 19:12-14)

15. [9]இதினிமித்தம், நாங்கள் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறோம்; நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும்,

[10]சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்,

[11]சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடியசாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்.

[12]ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும்,

[13]இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி,

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்.
[14](குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது .
(கொலோசெயர் 1:9-14)

16. [23]சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.
[24]உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார் . (1 தெசலோனிக்கேயர் 5:23,24)

17. [1]துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்,
[2]கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.
[3]அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் . (சங்கீதம் 1:1-3)

18. [15]நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்.
[2ஸ]ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன். (ஏசாயா 57:15, 66:2b)

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

19. [23]உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.

[24]தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார்.

(யோவான் 4:23-24)

20. [11]ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி,

[12]நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி,

[13]நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.

[14]அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். (தீத்து 2:11-14)

21. [12]ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு;

[13]ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

[14]இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

[15]தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்.

[16]கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி;

[17]வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள் . (கொலோசெயர் 3:12-17)

22. [7]பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்.

[8]அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்.

[9]தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது.

[10]நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.

[11]பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்.

[16]தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். (1 யோவான் 4:7-11,16)

23. [3]ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.

[4]துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.

[5]சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.

[6]நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.

[7]இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

[8]இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.

[9]சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.

[10]நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.

[11]என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்;

[12]சந்தோஷப்பட்டு களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்க தரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே . (மத்தேயு 5:3-12)

24. [8]இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார். (2 தீமோத்தேயு 4:8)

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

உடல் நலமும் பலமும்

25. [28]பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதிதேவன் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது.

[29]சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்.

[30]இளைஞர் இளைப்படைந்து சோர்ந்து போவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள்.

[31]கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள். (ஏசாயா 40:28-31)

26. [9]என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும். . . (2 கொரிந்தியர் 12:9)

27. [12]நீதிமான் பனையைப்போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான்.

[13]கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிரகாரங்களில் செழித்திருப்பார்கள்.

[14]கர்த்தர் உத்தமரென்றும், என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதியில்லையென்றும், விளங்கப்பண்ணும்படி,

[15]அவர்கள் முதிர்வயதிலும் கனிதந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள் . (சங்கீதம் 92:12-15)

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

28. [14]நானோ எப்பொழுதும் நம்பிக்கைகொண்டிருந்து, மேன்மேலும் உம்மைத் துதிப்பேன்.

[15]என் வாய் நாள்தோறும் உமது நீதியையும் உமது இரட்சிப்பையும் சொல்லும்; அவைகளின் தொகையை நான் அறியேன்.

[16]கர்த்தராகிய ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு நடப்பேன்; உம்முடைய நீதியைப்பற்றியே மேன்மைபாராட்டுவேன்.

[17]தேவனே, என் சிறுவயதுமுதல் எனக்குப்போதித்துவந்தீர்; இதுவரைக்கும் உம்முடைய அதிசயங்களை அறிவித்துவந்தேன்.

[18]இப்பொழுதும் தேவனே, இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும், முதிர்வயதும் நரைமயிருமுள்ளவனாகும் வரைக்கும் என்னைக் கைவிடீராக. (சங்கீதம் 71:14-18)

29. [13]என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.
(பிலிப்பியர் 4:13)

30. [11]கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன்கொடுப்பார்; கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார். (சங்கீதம் 29:11)

31. [35]தேவனே, உமது பரிசுத்த ஸ்தலங்களிலிருந்து பயங்கரமாய் விளங்குகிறீர்; இஸ்ரவேலின் தேவன் தம்முடைய ஜனங்களுக்குப் பெலனையும் சத்துவத்தையும் அருளுகிறவர்; தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.
(சங்கீதம் 68:35)

32. [21]என் மகனே, இவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக; மெய்ஞ்ஞானத்தையும் நல்லாலோசனையையும் காத்துக்கொள்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

[22]அவைகள் உன் ஆத்துமாவுக்கு ஜீவனும், உன் கழுத்துக்கு அலங்காரமுமாயிருக்கும்.

[23]அப்பொழுது நீ பயமின்றி உன் வழியில் நடப்பாய், உன் கால் இடறாது.

[24]நீ படுக்கும்போது பயப்படாதிருப்பாய்; நீ படுத்துக்கொள்ளும்போது உன் நித்திரை இன்பமாயிருக்கும்.

[25]சடிதியான திகிலும், துஷ்டர்களின் பாழ்க்கடிப்பும் வரும்போது நீ அஞ்சவேண்டாம்.

[26]கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக்கொள்ளாதபடி காப்பார் . (நீதிமொழிகள் 3:21-26)

33. [20]என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி: என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்;

[21]அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக; அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள்.

[22]அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்.

[23]எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்.
(நீதிமொழிகள் 4:20-23)

34. [17]கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு.

[18]நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம் .
(2 கொரிந்தியர் 3:17-18)

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தனிப்பட்ட ஜெபமும் அறிக்கையிடுதலும்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

வழிநடத்துதல் பாதுகாப்பு மற்றும் பத்திரப்படுத்துதல்

35. [7]கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.

[8]கர்த்தர் உன் போக்கையும் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார். (சங்கீதம் 121:7–8)

[7]ஒரு வழியுண்டு, அது ஒரு பட்சிக்கும் தெரியாது; வல்லூறின் கண்ணும் அதைக் கண்டதில்லை;

[8]துஷ்டமிருகங்களின் கால் அதில் படவில்லை; சிங்கம் அதைக் கடந்ததில்லை.

[21]அது ஜீவனுள்ள சகலருடைய கண்களுக்கும் ஒளித்தும், ஆகாசத்துப் பறவைகளுக்கு மறைந்தும் இருக்கிறது . (யோபு 28:7-8,21)

36. [1]கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர் யாருக்கு அஞ்சுவேன்?

[2]என் சத்துருக்களும் என் பகைஞருமாகிய பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க, என்னை நெருக்குகையில் அவர்களே இடறிவிழுந்தார்கள்.

[3]எனக்கு விரோதமாக ஒரு பாளயமிறங்கினாலும், என் இருதயம் பயப்படாது; என்மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன்.

[4]கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

[5]தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்.

[6]இப்பொழுது என் தலை என்னைச் சுற்றிலும் இருக்கிற என் சத்துருக்களுக்கு மேலாக உயர்த்தப்படும்; அதினிமித்தம் அவருடைய கூடாரத்திலே நான் ஆனந்த பலிகளையிட்டு, கர்த்தரைப் பாடி, அவரைக் கீர்த்தனம்பண்ணுவேன். (சங். 27:1-6)

37. [20]வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம் பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும், இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்.

[21]அவர் சமுகத்தில் எச்சரிக்கையாயிருந்து, அவர் வாக்குக்குச் செவிகொடு; அவரைக் கோபப்படுத்தாதே; உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பதில்லை; என் நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறது.

[22]நீ அவர் வாக்கை நன்றாய்க் கேட்டு, நான் சொல்வதையெல்லாம் செய்வாயாகில், நான் உன் சத்துருக்களுக்குச் சத்துருவாயும், உன் விரோதிகளுக்கு விரோதியாயும் இருப்பேன்.

[23]என் தூதனானவர் உனக்குமுன் சென்று, எமோரியரும் ஏத்தியரும் பெரிசியரும் கானானியரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடத்துக்கு உன்னை நடத்திக்கொண்டுபோவார்; அவர்களை நான் அதம்பண்ணுவேன்.

[24]நீ அவர்களுடைய தேவர்களைப் பணிந்துகொள்ளாமலும், சேவியாமலும், அவர்கள் செய்கைகளின்படி செய்யாமலும், அவர்களை நிர்மூலம்பண்ணி, அவர்களுடைய சிலைகளை உடைத்துப்போடுவாயாக.

[25]உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன்.

[26]கர்ப்பம் விழுகிறதும் மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை; உன் ஆயுசுநாட்களைப் பூரணப்படுத்துவேன்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

[27]எனக்குப் பயப்படும் பயத்தை உனக்குமுன் செல்லும்படி செய்வேன். நீ செல்லும் இடமெங்குமுள்ள ஜனங்கள் எல்லாரையும் கலங்கடித்து, உன் சத்துருக்கள் எல்லாரையும் முதுகு காட்டப்பண்ணுவேன் . (யாத் 23:20-27)

38. [1]கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா;

[2]கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா. (சங்கீதம் 127:1-2)

39. [5]உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து,

[6]உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.

[7]நீ உன்னை ஞானியென்று எண்ணாதே; கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு.

[8]அது உன் நாபிக்கு ஆரோக்கியமும், உன் எலும்புகளுக்கு ஊனுமாகும். (நீதிமொழிகள் 3:5-8)

40. [8]இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படி எல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்.

[9]நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். (யோசுவா 1:8-9)

41. [7]கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார். (நாகூம் 1:7)

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

42. [30]தேவனுடைய வழி உத்தமமானது; கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது; தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார். (சங்கீதம்18:30)

43. [17]நான் சாவாமல், பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன். (சங்கீதம் 118:17)

44. [22]நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை.

[23]அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது.

[24]கர்த்தர் என் பங்கு என்று என் ஆத்துமா சொல்லும்; ஆகையால் அவரிடத்தில் நம்பிக்கைகொண்டிருப்பேன்.

[25]தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர்.

[26]கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது. (புலம்பல் 3:22-26)

45. [11]நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே. (எரேமியா 29:11)

46. [11]உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து, எந்நாளும் கெம்பீரிப்பார்களாக; நீர் அவர்களைக் காப்பாற்றுவீர்; உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் உம்மில் களிகூருவார்களாக.

[12]கர்த்தாவே, நீர் நீதிமானை ஆசீர்வதித்து, காருணியம் என்னும் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்துகொள்ளுவீர். (சங்கீதம் 5:11-12)

47. [12]கர்த்தாவே, துன்மார்க்கனுக்குக் குழிவெட்டப்படும் வரைக்கும், நீர் தீங்குநாட்களில் அமர்ந்திருக்கப்பண்ணி,

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

[13]சிட்சித்து, உம்முடைய வேதத்தைக்கொண்டு, போதிக்கிற மனுஷன் பாக்கியவான். (சங். 94:12-13)

48. [10]நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன். (ஏசாயா 41:10)

49. [18]கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென். (2 தீமோத்தேயு 4:18)

50. [13]நான் விழும்படி நீ என்னைத் தள்ளினாய்; கர்த்தரோ எனக்கு உதவி செய்தார்.

[14]கர்த்தர் என் பெலனும், என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானார்.

[15]நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீரசத்தம் உண்டு; கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்.

[16]கர்த்தரின் வலதுகரம் உயர்ந்திருக்கிறது; கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்.

[17]நான் சாவாமல், பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்.

[18]கர்த்தர் என்னை வெகுவாய்த் தண்டித்தும், என்னைச் சாவுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை . (சங். 118:13-18)

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மனிதனின் காரியங்களில் தேவனின் தலையீடு

51. [20]தேவனுடைய நாமத்துக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரமுண்டாவதாக; ஞானமும் வல்லமையும் அவருக்கே உரியது.

[21]அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர்; ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர்; ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர்.

[22]அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர்; இருளில் இருக்கிறதை அவர் அறிவார்; வெளிச்சம் அவரிடத்தில் தங்கும்.

[34b]அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும்.

[35]பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள்; அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார்; அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி: என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை. (தானியேல் 2:20-22, 4:34b-35)

52. [8]கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;

[9]ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;

[10]ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். (எபேசியர் 2:8-10)

53. [7]உம்மை நம்புகிறவர்களை அவர்களுக்கு விரோதமாய் எழும்புகிறவர்களினின்று உமது வலதுகரத்தினால் தப்புவித்து இரட்சிக்கிறவரே! உம்முடைய அதிசயமான கிருபையை விளங்கப்பண்ணும்.

[8]கண்மணியைப் போல என்னைக் காத்தருளும்.

[9]என்னை ஒடுக்குகிற துன்மார்க்கருக்கும், என்னைச் சூழ்ந்துகொள்ளுகிற என் பிராணப்பகைஞருக்கும் மறைவாக, உம்முடைய செட்டைகளின் நிழலிலே என்னைக் காப்பாற்றும். (சங்கீதம்17:7-9)

54. [5]சீயோனைப் பகைக்கிற அனைவரும் வெட்கிப் பின்னிட்டுத் திரும்பக்கடவர்கள்.

[6]வீட்டின்மேல் முளைக்கும் புல்லுக்கு அவர்கள் ஒப்பாவார்களாக; அது வளருமுன் உலர்ந்துபோம்.
(சங்கீதம் 129:5-6)

55. [11]கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவிசெய்கிறது உமக்கு லேசான காரியம்; எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்குத் துணைநில்லும்; உம்மைச் சார்ந்து உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராக வந்தோம்; கர்த்தாவே, நீர் எங்கள் தேவன்; மனுஷன் உம்மை மேற்கொள்ளவிடாதேயும். (2 நாளாகமம் 14:11)

56. [6]எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, பரலோகத்திலிருக்கிற நீர் அல்லவோ தேவன்; தேவரீர் ஜாதிகளுடைய ராஜ்யங்களையெல்லாம் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது, ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக்கூடாது. (2 நாளாகமம் 20:6)

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

57. [3]கட்டப்பட்டிருக்கிறவர்களோடே நீங்களும்
கட்டப்பட்டவர்கள்போல அவர்களை
நினைத்துக்கொள்ளுங்கள்; நீங்களும்
சரீரத்தோடிருக்கிறவர்களென்று அறிந்து,
தீங்கநுபவிக்கிறவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்.
(எபிரெயர் 13:3)

58. [7]பிலதெல்பியா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது;

[8]உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான். (வெளி 3:7-8)

59. [6]எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக.

[7]உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும், உன் அரமனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக.
(சங்கீதம் 122:6-7)

60. [22]கர்த்தர் உங்களைத் தமக்கு ஜனமாக்கிக்கொள்ளப் பிரியமானபடியினால், கர்த்தர் தம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தம் தமது ஜனத்தைக் கைவிடமாட்டார்.
(1 சாமுவேல் 12:22)

61. [8]பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக; உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக.

[9]அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்.

[10]கர்த்தர் ஜாதிகளின் ஆலோசனையை விருதாவாக்கி, ஜனங்களுடைய நினைவுகளை அவமாக்குகிறார்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

[11]கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும்.

[12]கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக்கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது . (சங்கீதம் 33:8-12)

62. [3]தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள். (செப்பனியா 2:3)

63. [9]ஆண்டவரே, அவர்களை அழித்து, அவர்கள் பாஷையைப் பிரிந்துபோகப் பண்ணும்; கொடுமையையும் சண்டையையும் நகரத்திலே கண்டேன்; (சங்கீதம் 55:9)

64. [3]நீதிமான்கள் அநியாயத்திற்குத் தங்கள் கைகளை நீட்டாதபடிக்கு, ஆகாமியத்தின் கொடுங்கோல் நீதிமான்களுடைய சுதந்தரத்தின்மேல் நிலைத்திராது. (சங்கீதம் 125:3)

65. [1]மனுஷர் நமக்கு விரோதமாய் எழும்பினபோது, கர்த்தர் நமது பக்கத்திலிராவிட்டால்,

[2]கர்த்தர் தாமே நமது பக்கத்திலிராவிட்டால்,

[3]அவர்கள் கோபம் நம்மேல் எரிகையில், நம்மை உயிரோடே விழுங்கியிருப்பார்கள்.

[4]அப்பொழுது தண்ணீர்கள் நம்மேல் பாய்ந்து, வெள்ளங்கள் நமது ஆத்துமாவின்மேல் பெருகி,

[5]கொந்தளிக்கும் ஜலங்கள் நமது ஆத்துமாவின்மேல் புரண்டுபோயிருக்கும் என்று இஸ்ரவேல் இப்பொழுது சொல்வதாக.

[6]நம்மை அவர்களுடைய பற்களுக்கு இரையாக ஒப்புக்கொடாதிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

[7]வேடருடைய கண்ணிக்குத் தப்பின குருவியைப் போல நம்முடைய ஆத்துமா தப்பிற்று, கண்ணி தெறித்தது, நாம் தப்பினோம்.

[8]நம்முடைய சகாயம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது .

(சங்கீதம் 124)

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சோதனையிலும் துன்ப அனுபவங்களிலும்

66. [57]நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

[58]ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக. (1 கொரி 15:57-58)

67. [10]ஆகையால், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்ளும்படி, சகலத்தையும் அவர்கள் நிமித்தமாகச் சகிக்கிறேன்.

[11]இந்த வார்த்தை உண்மையுள்ளது; என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால் அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்;

[12]அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார்;

[13]நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்; அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார். (2 தீமோத்தேயு 2:10-13)

68. [3]நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக;

[4]அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிருந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.

[5]கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

[6]இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்.

[7]அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.

[8]அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து,

[9]உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள். **(1 பேதுரு 1:3-9)**

69. [2]என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது,

[3]உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.

[4]நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது. **(யாக்கோபு 1:2-4)**

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

70. [1]கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்.

[2]கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மைபாராட்டும்; சிறுமைப்பட்டவர்கள் அதைக்கேட்டு மகிழுவார்கள்.

[3]என்னோடே கூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்; நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக.

[4]நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார். (சங்கீதம் 34:1-4)

71. [31b]தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?

[32]தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?

[33]தேவன் தெரிந்துகொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்.

[34]ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே.

[35]உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும்,

[36]கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?

[37]இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.

[38]மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும்,

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

[39]உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.
(ரோமர் 8:31b–39)

72. [7]கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

[8]அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான்.
(எரேமியா 17:7-8)

73. [7]ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். (யாக்கோபு 4:7)

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தனிப்பட்ட ஜெபமும் அறிக்கையிடுதலும்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஆவிக்குரிய போராட்டம்

74. 17உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்; இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும், என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏசாயா 54:17)

75. 1கர்த்தாவே, நீர் என் வழக்காளிகளோடே வழக்காடி, என்னோடு யுத்தம்பண்ணுகிறவர்களோடே யுத்தம் பண்ணும்.

2நீர் கேடகத்தையும் பரிசையையும் பிடித்து, எனக்கு ஒத்தாசையாக எழுந்துநில்லும்.

3என்னைத் துன்பப்படுத்துகிறவர்களோடு எதிர்த்துநின்று, ஈட்டியையோங்கி அவர்களை மறித்து: நான் உன் இரட்சிப்பு என்று என் ஆத்துமாவுக்குச் சொல்லும். (சங்கீதம் 35:1-3)

76. 3நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல.

4எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.

5அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.
(2 கொரிந்தியர் 10:3-5)

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

77. மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள். (வெளி. 12:11)

78. [25]இரும்பும் வெண்கலமும் உன் பாரதரட்சையின் கீழிருக்கும்; உன் நாட்களுக்குத்தக்கதாய் உன் பெலனும் இருக்கும் என்றான்.

[26]யெஷூரனுடைய தேவனைப்போல் ஒருவரும் இல்லை; அவர் உனக்குச் சகாயமாய் வானங்களின்மேலும் தமது மாட்சிமையோடு ஆகாய மண்டலங்களின் மேலும் ஏறிவருகிறார்.

[27]அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்; அவர் உனக்கு முன்னின்று சத்துருக்களைத் துரத்தி, அவர்களை அழித்துப்போடு என்று கட்டளையிடுவார்.
(உபாகமம் 33:25-27)

79. [5]....பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.

[6]ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.

[7]அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.

[8]தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.

[9]விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே.

10கிறிஸ்து இயேஷுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக;

11அவருக்கு மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென். **(1 பேதுரு 5:5b-11)**

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தனிப்பட்ட ஜெபமும் அறிக்கையிடுதலும்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

பூரண மீட்பு

80. [24]வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும்,

[25]தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென். (யூதா 24,25)

81. [17]நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்றும்,

[18]தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்;

[19]தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

[20]எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில்மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக,

[21]அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

உட்காரும்படி செய்து,

[22]எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி,

[23]எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார். (எபேசியர் 1:17-23)

82. [6]நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். (பிலிப்பியர் 1:6)

83. [1]என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி.

[2]என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.

[3]அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி,

[4]உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி,

[5]நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயதுபோலாகிறது. (சங்கீதம் 103:1-5)

84. [1]ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாய் இருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.

[2]கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. (ரோமர் 8:1,2)

85. [14]ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார். (எபிரெயர் 10:14)

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

86. [13]மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.

[14]ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று. கலாத்தியர் 3:13,14 ஆதியாகமம் 24:1b இந்த வசனங்களின் அடிப்படையில்.

87. [1]நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை.

[2]பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.

[3]அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான். (1 யோவான் 3:1-3)

88. [16]தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார். (1 யோவான் 4:16)

89. [11]உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.
(1 கொரிந்தியர் 6:11)

90. [20]நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணின சமாதானத்தின் தேவன்,

[21]இயேசு கிறிஸ்துவைக்கொண்டு தமக்குமுன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படிசெய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக; அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்.
(எபிரெயர் 13:20, 21)

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தனிப்பட்ட ஜெபமும் அறிக்கையிடுதலும்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மனோரீதியிலும் உணர்ச்சியின் அடிப்படையிலும் நிலையானதன்மை

91. [28]வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

[29]நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

[30]என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார். (மத்தேயு 11:28-30)★

92. [13]பரிசுத்தஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்திலும் உங்களை நிரப்புவாராக. (ரோமர் 15:13)★

93. [3]நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல.

[4]எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாய் இராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாய் இருக்கிறது.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

[5]அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.
(2 கொரி. 10:3-5)

94. [3]உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர். **(ஏசாயா 26:3)** ⋆

95. [9]ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது.

[10]ஏனெனில், அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்.

[11]ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம். **(எபிரெயர் 4:9-11)**

96. [165]உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை.
(சங்கீதம் 119:165)

97. [6]நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.

[7]அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

[8]கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ, நீதியுள்ளவைகள் எவைகளோ, கற்புள்ளவைகள் எவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.
(பிலிப்பியர் 4:6-8)

98. [7]தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். (2 தீமோத்தேயு 1:7)

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தனிப்பட்ட ஜெபமும் அறிக்கையிடுதலும்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தேவனைச் சேவித்தல்

99. [14]கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

[15]இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்.

[16]கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரண வாசனையாகவும் இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும் இருக்கிறோம். இவைகளை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதியானவன்?

[17]அநேகரைப்போல, நாங்கள் தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதியில் பேசுகிறோம். (2 கொரிந்தியர் 2:14-17)

100. [8]மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார். (2 கொரி. 9:8)

101. [19]அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும். (மத்தேயு 18:19)

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

102. [37]அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்;

[38]ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார். (மத்தேயு 9:37, 38)

103. [14]இராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். (மத். 24:14)

104. [10]மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ,

[11]அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.
(ஏசாயா 55:10-11)

105. [20]. . . நீ பலங்கொண்டு தைரியமாயிருந்து, இதை நடப்பி; நீ பயப்படாமலும் கலங்காமலும் இரு; தேவனாகிய கர்த்தர் என்னும் என் தேவன் உன்னோடே இருப்பார்; கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கடுத்த சகல கிரியைகளையும் நீ முடித்துத் தீருமட்டும், அவர் உன்னைவிட்டு விலகவுமாட்டார், உன்னைக் கைவிடவுமாட்டார். (1 நாளாகமம் 28:20)

106. [13]விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்.

[14]உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது. (1 கொரிந்தியர் 16:13, 14)

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

107. [20]கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.
(கலாத்தியர் 2:20)

108. [1]நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்.

[2]பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.

[3]ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.

[4]நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள். (கொலோசெயர் 3:1-4)

109. [38]விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்.

[39]நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்.
(எபிரெயர் 10:38,39)

110. [12b]. . .அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்.

[13]ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.

[14]நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள்,

15கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு,

16எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள். (பிலிப்பியர் 2:12b-16a)

111. 7ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்.

8அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

9நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்,

10இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்,

11அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்.

12நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்.

13சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன்,

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி,

[14]கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். (பிலிப்பியர் 3:7-14)

112. [20]நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, (எபேசியர் 3:20)

113. [11]நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவ பக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு.

[12]விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்.

[13]நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிரசன்னமாகும்வரைக்கும், நீ இந்தக் கற்பனையை மாசில்லாமலும் குற்றமில்லாமலும் கைக்கொள்ளும்படிக்கு,

[14]எல்லாவற்றையும் உயிரோடிருக்கச் செய்கிற தேவனுடைய சந்நிதானத்திலேயும், பொந்தியுபிலாத்துவின் முன்னின்று நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப்பண்ணின கிறிஸ்து இயேசுவினுடைய சந்திதானத்திலேயும் உனக்குக் கட்டளையிடுகிறேன்.

[15]அந்தப் பிரசன்னமாகுதலை தேவன் தம்முடைய காலங்களில் வெளிப்படுத்துவார். அவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும்,

[16]ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென். (1 தீமோத்தேயு 6:11-16)

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

சிலுவையில் நிறைவேற்றப்பட்ட பரிமாற்றம்

நாம் மன்னிக்கப்படும்படி இயேசு தண்டிக்கப்பட்டார்.[1]

நாம் சுகம் பெறும்படி இயேசு காயப்பட்டார்.[2]

அவருடைய நீதியினால் நாம் நீதியாகும்படி இயேசு நமது பாவங்களினால் பாவமாக்கப்பட்டார்.[3]

நாம் அவருடைய வாழ்வை வாழும்படி அவர் நமது மரணத்தை ஏற்றார்.[4]

நாம் ஆசீர்வாதத்தைப் பெறும்படி இயேசு சாபமானார்.[5]

அவருடைய பரிபூரணத்தில் நாம் பங்குகொள்ளும்படி இயேசு நமது வறுமையை ஏற்றுக் கொண்டார்.[6]

நாம் அவருடைய மகிமையில் பங்கு கொள்ள இயேசு இகழப்பட்டார்.[7]

நமது புறக்கணிப்பை இயேசு அனுபவித்ததாலே நாம் பிதாவினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறோம்.[8]

மரணத்தால் இயேசு தேவனை விட்டு பிரிக்கப்பட்டதாலே நாம் தேவனால் நித்தியமாக இணைக்கப்பட்டுள்ளோம்.[9]

நமது பழைய மனிதன் அவரில் மரித்ததினாலே புதிய மனிதன் நமக்குள்ளே ஜீவன் பெற்றுள்ளான்.[10]

---

1 *ஏசாயா* 53:4–5
2 *ஏசாயா* 53:4–5
3 *ஏசாயா* 53:10, *2 கொரிந்தியர்* 5:21
4 *எபிரெயர்* 2:9
5 *கலாத்தியர்* 3:13–14
6 *2 கொரிந்தியர்* 8:9, 9:8
7 *மத்தேயு* 27:35–36, *எபிரெயர்* 12:2, 2:9
8 *மத்தேயு* 27:46–51, *எபேசியர்* 1:5–6
9 *ஏசாயா* 53:8, *1 கொரிந்தியர்* 6:17
10 *ரோமர்* 6:6, *கொலோ.* 3:9–10

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

மீட்கப்பட்டோர் இப்படிச் சொல்வார்களாக[1]

என்னுடைய சரீரம் மீட்கப்பட்டு[2], சுத்திகரிக்கப்பட்டு[3], இயேசுவின் இரத்தத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறதினாலே[4], அது பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கிறது.[5]

என் சரீரத்தின் உடலுறுப்புகள், தேவனுடைய மகிமைக்கும் ஊழியத்திற்கும் ஒப்புக் கொடுக்கப்பட்ட நீதியின் அவயவங்களாயிருக்கிறது.[6]

என்னிடத்தில் பிசாசிற்கு எந்தப் பங்குமில்லை. என் மேல் அதிகாரம் செலுத்தவோ, கணக்கைத் தீர்த்துவை என்று சொல்லவோ பிசாசிற்கு உரிமையில்லை. அனைத்தும் இயேசுவின் இரத்தத்தினாலே கட்டித் தீர்க்கப்பட்டாயிற்று.[7]

ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலும் என் சாட்சியின் வசனத்தினாலும் நான் சாத்தானை மேற்கொண்டேன். மரணமே நேரிடுவதாயினும் அதிலிருந்து தப்பும்படி என் ஜீவனை பொருட்படுத்தமாட்டேன்.[8]

என் சரீரம் கர்த்தருடையது; கர்த்தர் என் சரீரத்திற்குரியவர்.[9]

---

1 *சங்கீதம்* 107:2
2 *1 கொரிந்தியர்* 6:19
3 *எபேசியர்* 1:7
4 *1 யோவான்* 1:7
5 *எபிரெயர்* 13:12
6 *ரோமர்* 6:13
7 *ரோமர்* 3:23-25, 8:33-34
8 *வெளி.* 12:11
9 *1 கொரிந்தியர்* 6:13

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

இரத்தம் மட்டுமே

இயேசுவின் இரத்தம் நமக்குச் செய்து முடித்தவற்றைப் பற்றி தேவனுடைய வார்த்தை என்ன சொல்கின்றதோ அதை நமது சொந்த சாட்சியாகச் சொல்லும்போது, நாம் சாத்தானை மேற்கொள்கிறோம்.[1]

இயேசுவின் இரத்தத்தின் மூலம் நான் பிசாசின் கையிலிருந்து மீட்கப்படுகிறேன்.[2]

இயேசுவின் இரத்தத்தின் மூலம் என்னுடைய எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்பட்டன.[3]

இயேசுவின் இரத்தத்தின் மூலம் என்னுடைய எல்லாப் பாவத்திலிருந்தும் தொடர்ந்து சுத்திகரிக்கப்படுகிறேன்.[4]

இயேசுவின் இரத்தத்தின் மூலம் தேவனுக்கு ஏற்றவனென்றும், நீதிமானாகவும், பாவம் செய்யாதவனைப் போலவும் கருதப்படுகிறேன்.[5]

இயேசுவின் இரத்தத்தின் மூலம் சுத்திகரிப்பைப் பெற்று பரிசுத்தமாக்கப்பட்டு தேவனுக்கென்று பிரத்தியேகப்படுத்தப்படுகிறேன்.[6]

இயேசுவின் இரத்தத்தின் மூலம் தேவ சமுகத்தில் பிரவேசிக்க தைரியத்தைப் பெறுகிறேன்.[7]

இயேசுவின் இரத்தம் என் சார்பில் பரலோகத்திலிருக்கும் தேவனை நோக்கி தொடர்ந்து முறையிடுகிறது.[8]

---

[1]வெளி. 12:11
[2]எபேசியர் 1:7
[3]1 யோவான் 1:9
[4]1 யோவான் 1:7
[5]ரோமர் 5:9
[6]எபிரெயர் 13:12
[7]எபிரெயர் 10:19
[8]எபிரெயர் 12:24

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

தேவனுடைய பாதுகாப்பிலுள்ள நம்பிக்கையை அறிக்கையிடுதல்

எனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும். எனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நான் குற்றப்படுத்துவேன்.

இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும் என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார்.

எனக்கு விரோதமாக பேசப்படுபவைகள் எவைகளோ ஜெபிக்கப்படுவது எதுவோ, எனக்கு யார் தீங்கு செய்ய முற்படுகிறார்களோ அவர்களை நான் மன்னிக்கிறேன். (அவர்களின் பெயர்கள் தெரிந்தால் இங்கு கூறவும்)

அவர்களை மன்னித்தது மட்டுமன்று கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களை நான் ஆசீர்வதிக்கிறேன்.

நீரே, நீர் மட்டுமே என் தேவன் என்று அறிக்கையிடுகிறேன். உம்மையன்றி எனக்கு வேறு யாருமில்லை. நீதியுள்ள தேவனே, இரட்சகரே, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரே உம்மை நான் ஆராதிக்கிறேன்.

நிபந்தனையற்ற கீழ்ப்படிதலுடன் நான் என்னை புதிதாய் உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன்.

என்னை ஒப்புக் கொடுத்தது மட்டுமன்றி, உமது வார்த்தையின் படி செய்ய ஒப்புக் கொடுக்கிறேன். நான் பிசாசையும், அவன் தாக்குதல்களையும், எல்லா அழுத்தங்களையும், வஞ்சனைகளையும், எனக்கு விரோதமாய் பயன்பட இருக்கும் கருவிகளையும்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

பிரதிநிதிகளையும் எதிர்த்து நிற்கிறேன்.

அவைகளுக்கு நான் என்னை ஒப்புக் கொடுப்பதில்லை. அவைகளை எதிர்க்கிறேன்; என்னைவிட்டு விரட்டுகிறேன். இயேசுவின் நாமத்தினால் என்னைவிட்டு புறம்பாக்குகிறேன். சிறப்பாக: பெலவீனம், தொற்றுநோய், வலி, வீக்கம், வேண்டாத வளர்ச்சி, ஒவ்வாமை, வைரஸ்கள், எல்லாவித பில்லிசூனியங்கள், எல்லாவித மன உளைச்சல்கள் (உனக்கு விரோதமாக செயற்படும் நோயையும் அல்லது தீய ஆவியையும் பெயர் சொல்லி இங்கு குறிப்பிடு).

இறுதியாக, கர்த்தாவே இயேசுவின் சிலுவையின் தியாக மரணத்தினால் நான் சாபத்திலிருந்து விடுபட்டு நீர் ஆபிரகாமை ஆசீர்வதித்த எல்லா ஆசீர்வாதங்களுக்குள்ளும் கடந்து வருகிறேன்: உயர்வு, ஆரோக்கியம், இனப்பெருக்கம், வளமை, வெற்றி, தேவ நட்பு, தேவ தயவு ஆகிய ஆசீர்வாதங்களுக்குள் கடந்து வருகிறேன்.[2]

ஆமென்.

[1]மத்தேயு *5:43–45*, ரோமர் *12:14*

[2]கலாத்தியர்*3:13,14*, ஆதியாகமம் *24:1.*

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

ஆசிரியரைப்பற்றி. . .

டாரிக் பிரின்ஸ் இந்தியாவில் பெங்களூர் பட்டணத்தில் பிரிட்டிஷ் தம்பதியினருக்கு, பிறந்தார். பிரிட்டனிலுள்ள பிரசித்தி பெற்ற கல்வி நிறுவனங்களான ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்து கிரேக்கம் மற்றும் இலத்தீன் மொழிகளில் புலமை பெற்றார். **1940** முதல் **1949** வரை கேம்பிரிட்ஜில் உள்ள கிங்ஸ் கல்லூரியில் புராதன மற்றும் நவீன தத்துவம் என்ற துறையில் பேராசிரியராக இருந்தார். அராமியம் மற்றும் எபிரெய மொழியை கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் கற்றார். மேலும் இவர் உலகத்திலுள்ள பல நவீன மொழிகளைப் பேச அறிந்தவர்.

இரண்டாம் உலகப் போரின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் இராணுவத்தில் மருத்துவமனை ஊழியராகப் பணி புரிந்தபோது தன் வாழ்க்கையை மாற்றிய இயேசுவை நேருக்கு நேர் சந்திக்கும் அனுபவத்தைப் பெற்றார். அதைக் குறித்து அவர் பின்வருமாறு கூறுகிறார்:

இச்சந்திப்பினால் என்னால் மாற்றமுடியாத இரண்டு முடிவுகளை மேற்கொண்டேன்: முதலாவது இயேசு ஜீவிக்கிறார். இரண்டாவது வேதாகமம் உண்மையான, அர்த்தம் நிறைந்ததாய் தற்காலத்திற்கும் ஏற்ற புத்தகமாகும். இந்த இரண்டு முடிவுகளும் என் வாழ்க்கையில் நிரந்தரமான மாற்றத்தை ஏற்படுத்தியது.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் பிரிட்டிஷ் இராணுவம் இவரை எங்கு பணியில் வைத்திருந்ததோ அங்கேயே தொடர்ந்து தங்கியிருந்தார். அந்த இடம் எருசலேம் பட்டணமாகும். லிடியா என்ற இவரது முதல் மனைவியை மணந்ததன் மூலம் லிடியாவின்

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

குழந்தைகள் இல்லத்தில் குடியிருந்த எட்டு பிள்ளைகளுக்கு இவர் வளர்ப்புத் தந்தையானார். இவர்கள் குடும்பமாக 1948ல் *இஸ்ரவேல் நாடு உருவாவதைக் கண்டு களித்தனர். கென்யாவில் கல்வியாளராகப் பணிபுரிந்தபோது லிடியாவும் பிரின்ஸீம் ஆப்பிரிக்கப் பெண்குழந்தை ஒன்றை ஒன்பதாவது குழந்தையாகத் தத்தெடுத்தனர். 1975ல் லிடியாவின் மரணத்திற்குப் பின் 1978ல் பிரின்ஸ் மறுமணம் செய்தார். இவரது முதல் மனைவியைப் போல் ரூத்தையும் அவர்கள் எருசலேம் பட்டணத்தில் ஆண்டவருடைய ஊழியம் செய்து கொண்டிருந்த போது சந்தித்தார். ரூத்தின் பிள்ளைகள் மூவருடன் அவர்களுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள் பன்னிரண்டு பேராயினர். மேலும், அவர்களுக்கு அநேகப் பேரப்பிள்ளைகளும், அவர்களுடைய பிள்ளைகளுமாக அவர்கள் குடும்பம் பெரிதானது.

இவரது சபைப் பாகுபாடற்ற நிலையினால் பலதரப்பட்ட இன, மத மக்கள் மத்தியிலும் இவர் பிரசங்கிக்க வழிவாசல் திறக்கப்பட்டது. நமது காலத்தில் சர்வதேச அளவில் சிறந்த வேத விற்பன்னராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

"Today With Derek Prince" என்ற தினந்தோறும் ஒலிபரப்பப்படும் வானொலி நிகழ்ச்சி உலகத்தின் பாதிக்கு மேல் அரபி, ஐந்து சீன மொழிகள் (மண்டாரின், அமாய், கேன்டோனிஸ், ஷாங்கையீஸ், ஸ்வேடோ,) மங்கோலியன், ஸ்பேனிஷ், ரஷ்யன், டோங்கன் ஆகிய மொழிகளில் மக்கள் கேட்கின்றனர். இவர் 60 புத்தகங்களுக்கு மேல் எழுதியுள்ளார். அவைகள் ஐம்பதுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

“உலகளாவிய தலைவர்களின் அமைப்பு” (Global

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

Outreach Leaders Programme) என்ற டெரிக் பிரின்ஸ் ஊழியங்களின் மூலமாக இவரது புத்தகங்களும் ஒலி நாடாக்களும் மூன்றாவதாக உலக நாடுகள் கிழக்கு ஐரோப்பா, ரஷ்யா ஆகிய நாடுகளிலுள்ள கிறிஸ்தவ தலைவர்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

டெரிக் பிரின்ஸ் ஊழியங்களின் தலைமையிடம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வட கரோலினா மாகாணத்திலுள்ள சார்லட் பட்டணத்தில் அமைந்துள்ளது. இதன் கிளை அலுவலகங்கள் ஆஸ்திரேலியா, கனடா, ஜெர்மனி, ஹாலந்து, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, இந்தியா மற்றும் பிரிட்டனில் செயல்படுகின்றன.

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/

டெரிக் பிரின்ஸ் எழுதின மற்ற புத்தகங்கள்....

தேவனின் மருந்து புட்டி

உங்களில் உள்ள தூய ஆவியானவர்

தெய்வீகப் பரிமாற்றம்

சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு கடந்து வருதல்

ஆசீர்வாதங்கள் அல்லது சாபங்கள்: நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்

வாழ்வளிக்கும் விசுவாசம்

அவர்கள் பிசாசுகளைத் துரத்துவார்கள்

ஆவிக்குரிய போராட்டம்

ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம்பண்ணப்படுதல்

அனாதைகள், விதவைகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர்

சுயமாய் வேதத்தைக் கற்பதற்கான பாடங்கள்

Contact:

Derek Prince Ministries - India
1C, EVR Road, IIIrd Floor, Puthur,
Trichy - 620 017,
Tamil Nadu, S.India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201
Website: www.derekprince.in

Created with Print2PDF. To remove this line, buy a license at: http://www.software602.com/